இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Reality Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 31, 04 ஒக்டோபர் 2024 இதழ்:- 18

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## ஜனாதிபதியைச் சந்தித்தார் ஜெய்சங்கர்! அநுரவைச் சந்தித்தது கௌரவமாம்!

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் ஜனாதிபதி அனுர குமாரதிசநாயக்கவை சந்தித்து பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டுள்ளார். சமூக ஊடக பதிவில் அவர் இது குறித்து தெரிவித்துள்ளதாவது. ஜனாதிபதி அனுர குமாரதிசநாயக்கவை சந்திக்க முடிந்ததை கௌரவமான விடயமாக கருதுகின்றேன். (3ம் பக்கம் பார்க்க)



ஈழநாடு:- மின்னிதழில் வாசிக்க eelanadu.ca

## வாழ்வாதார உதவி கேட்ட பெண்மணிக்கு “சாராயச்சாலை” அனுமதி வாங்கிக் கொடுத்து உதவி செய்தாராம் விக்கினேஸ்வரன் ஐயா!

வடக்கு கிழக்கு மாகணங்கள் எங்கும் மதுபானச் சாலைகளும் இளைஞர்கள் மத்தியில் போதைப் பாவனைகளும் சிங்கள அரசாங்கத்தால் திட்டமிட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்று இதுவரை இருந்த குற்றச்சாட்டாகும். ஆனால் தற்போது புதிய அரசு பொறுப்பேற்றதன் பின்னர் இத்தகைய செயற்பாடுகளில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் அடங்குவதாகத் தெரிய வந்து கொண்டிருக்கின்றது. தன்னை ஒரு தூய்மைவாதி என்று பீற்றித் திரியும் அயோக்கியத்தனம் நிறைந்த முன்னாள் அநீதியரசர் விக்கினேஸ்வரன் தான் செய்தது ஒரு சமூகக் கேடு என்பதை ஏற்றுக் கொள்ளாது தெரிவிக்கும் கருத்தினைப் பாருங்கள். மதுபான சாலை அனுமதியினை பெறுவதற்காக சிபாரிசுகடிதம் ஒன்றினையே வழங்கினேன் அதனை வைத்து ஏதோ பெரிய பூதம் (4ம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றத் தேர்தல்:- தப்பிப் பிழைப்பாரா அநுரகுமார?

இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பாராளு மன்றத்தை கலைத்து புதிய தேர்தலை அறிவித்துள்ளார். ஜனாதிபதியைப் பொறுத்த மட்டிலும், அவரின் ஜே.வி.பியை பொறுத்த மட்டிலும் இது தவிர்க்க முடியாத ஒன்று. ஏனெனில் அவர்கள் மக்களுக்கு வழங்கிய மாற்றத்தை செயல்படுத்த நிறைவேற்று அதிகாரம் மட்டும் போதாது, அரசியல் அமைப்பு சட்ட சரத்துக்களைப் பொறுத்து பாராளுமன்றில் சாதாரண பெரும்பான்மை (113) முதல் மூன்றில் இரண்டு (150) பெரும்பான்மை வரை தேவை. இவை எல்லாவற்றையும் விடவும் புதிய ஜனாதிபதியினதும், அவரது கட்சியினதும் எதிர்கால (9ம் பக்கம் பார்க்க)

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!



என் இனிய உறவுகளே! இவர்களுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்த நாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 23 செப்டம்பர் முதல் 14 வது வருடத்தில் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி. தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

“ஒரு முகவர் இரு சேவைகள்”
“One Broker Two Services”
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
Sales Representative B.Comm.
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



21 Years Real Estate Experience

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply


HOMELIFE HIGHER STANDARDS

**Bus: 416.298.3200**
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

**Simcoe St N. & Conlin Rd**

**Oshawa** $264,990
0 Beds • 1 Bath • 1 Rooms
Welcome To University Studios!


**Sheppard Ave E / Neilson Rd**

**Malvern** $749,000
3 Beds • 3 Baths • 6+2 Rooms
FULLY RENNOVATED


**Neilson/Tapscott**

**Scarborough** $459,000
2 Beds • 2 Bath • 5 Rooms
Close to the Hwy 401 and the TTC

**Simcoe St N/ Brittania Ave**


**Oshawa** $770,000
4 Beds • 3 Bath • 9 Rooms
A Beautiful Corner Townhouse

**Sheppard & Neilson**

**Malvern** $699,900
3 Beds • 2 Baths • 6 Rooms
Low Maintenance Fees!

**Galloway Rd/ Guildwood Pkwy**

**Scarborough** $998,888
3+4 Beds • 4 Baths • 6+5 Rooms
Hardwood Throughout

**McLevin Ave & Morningside**

**Malvern** $888,000
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Finished Basement


**Townline Rd & Shankel Rd**

**Oshawa** $999,900
3 Beds • 4 Baths • 8 Rooms
Close To Highway 401, 418, 407

**Mississauga Rd & Eglinton Ave**

**Mississauga** $999,999
3 Beds • 4 Baths • 6+1 Rooms
Fully Fin Basement W Sep Entrance


**Church St N & Rossland Rd W**


**Ajax** $899,999
3 Beds • 3 Baths • 6 Rooms
Hardwood flooring throughout


**Woodbine Ave & Church St**

**Georgina** $1,170,000
4 Beds • 4 Baths • 9 Rooms
Stunning 2-year-old home

**Holland St W & Simcoe Road**

**Bradford** $1,290,000
4+1 Beds • 5 Baths • 9 Rooms
Finished W/O Basement Kitchen

**Markham Rd / 16th Ave**

**Markham** $3,599
3 Beds • 2 Baths • 8 Rooms
~5min Walk To Mount Joy GO

**Bellamy Rd/Eglinton Ave**
FOR LEASE

**Markham** $3,000
3 Beds • 1 Bath • 5 Rooms
Quick Access To Highway 401

**Warden Ave / St. Clair Ave E**
FOR LEASE

**Scarborough** $2,700
2+1 Beds • 1 Bath • 5 Rooms
Nicely Maintained And Cleaned

**Neilson Rd & Sheppard Ave**
FOR LEASE

**Scarborough** $2,000
2 Beds • 1 Bath • 4 Rooms
Oversized Basement For Rent

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 - 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# ஜனாதிபதியைச் சந்தித்தார் ஜெய்சங்கர்! அநுரவைச் சந்தித்தது கௌரவமாம்!

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு ள்ள இந்திய வெளிவிவகார அமை ச்சர் எஸ் ஜெய்சங்கர் ஜனாதிபதி அனுர குமாரதிசநாயக்கவை சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள் ளார்.



சமூக ஊடக பதிவில் அவர் இது குறித்து தெரிவித்துள்ளதாவது. ஜனாதிபதி அனுர குமாரதிசநாயக் கவை சந்திக்க முடிந்ததை கௌரவ மான விடயமாக கருதுகின்றேன்.

இந்திய குடியரசுதலைவர் திரௌபதி முர்மு மற்றும் இந்திய பிரதமர் நரேந்திரமோடியின் வாழ்த்துச் செய்தி களை தெரிவித்தேன். இந்திய இல ங்கை உறவுகளிற்கான அவரது அன் பான உணர்வுகளிற்கும் வழிகாட்டு தல்களிற்கும் பாராட்டுக்கள்.

தற்போதைய ஒத்துழைப்புகளை மேலும் ஆழமாக்குவது குறித்தும் இரு நாடுகளினது மக்களினதும் பிராந்தியத்தினதும் நன்மைக்காக இந்திய இலங்கை உறவுகளை வலுப் படுத்துவது குறித்தும் ஆராய்ந் தோம் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜெய்சங்கர் இலங்கை ஜனாதிபதி உட்பட முக்கிய தலைவர் களை சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தேசிய மக்கள் சக்தியின் அனுரகுமார திசநாயக்க தெரிவு செய்யப்பட்ட பின் னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் மேற்கொள்ளும் விஜயம் என்பதால் இந்த விஜயம் மிகுந்த முக்கியத் துவம் பெறுகின்றது.

இந்தியாவின் அயல் நாடுகளிற்கு முன் னுரிமை மற்றும் சாகர் கொள்கை களின் அடிப்படையில் இந்த விஜயம் பரஸ்பர நன்மைக்காக நீண்ட ஒத்துழைப்பை மேலும் ஆழமாக்கும் இரு தரப்புகளினதும் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றது என இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்து ள்ளது.

ஜெய்சங்கரின் விஜயம் இரு நாடு களிற்கும் இடையிலான உறவுகளை மீளாய்வு செய்வதுடன் கொழும்பின் புதிய தலைமைத்துவத்தின் கீழ் எதிர் கால சாத்தியக்கூறுகள் குறித்து ஆரா யும் வகையில் அமைந்திருக்கும்.

இந்திய முதலீடுகள், பிராந்திய பாது காப்பு, இலங்கையின் சிறுபான்மை தமிழர் தொடர்பான அணுகுமுறை குறித்த அனுரகுமாரதிசநாயக்கவின் நிலைப்பாட்டை புதுடில்லி கேட்ட றிவதற்கான வாய்ப்பாக இந்த விஜயம் காணப்படும். புதன்கிழமை இலங்கை ஜனாதிபதியை சந்தித்த இலங்கை க்கான இந்திய தூதுவர் சந்தோஸ் ஜா இலங்கை பிராந்தியத்தில் அமைதி யான ஸ்திரமான நாடாக மாறுவதை இந்தியா பார்க்க விரும்புவதாக தெரி வித்தார். ஊழலிற்கு எதிரான இலங்கையின் போராட்டத்திற்கு உத வுவதற்காக இலங்கையின் டிஜிட்டல் மயப்படுத்தும் திட்டத்திற்கு உதவ தயார் என அவர் தெரிவித்தார்.

விஜித ஹேரத்திற்கு உறுதியளித்தேன் என இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சரு டனான பேச்சுவார்த்தைகளை பூர்த்தி செய்துள்ளேன். அவருடைய புதிய பொறுப்புகளிற்காக அவருக்கு மீண் டும் வாழ்த்துக்களை தெரிவித்துள் ளேன்.

இந்திய இலங்கை கூட்டுறவின் பல் வேறு பரிமாணங்களை மதிப்பாய்வு செய்தோம். இலங்கையின் பொருளா தாரத்தை மீள கட்டியெழுப்புவதற் கான இந்தியாவின் தொடர்ச்சியான ஆதரவு குறித்து விஜித ஹேரத்திற்கு உறுதியளித்தேன். அயல்நாடுகளிற்கு முன்னுரிமை,எங்கள் இரு நாடுகளின் உறவுகளின் முன்னேறத்தை எப்போ தும் வழி நடத்தும். என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்

இது இவ்வாறிருக்க ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை இந்தியாவிற்கு விஜயம் செய்யுமாறு இந்திய பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தியப் பிரதமர் சார்பில் இந்த அழைப்பிதழை இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ஜனாதிபதியிடம் விடுத்துள்ளார்.



## இரு நாட்டு வெளிவிவகார அமைச்சர்கள் சந்திப்பு

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு ள்ள இந்திய வெளிவிவகார அமை ச்சர் எஸ் ஜெய்சங்கர் இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தை வெளிவிவகார அமைச்சில் சந்தித்து பேச்வார்ததைகளை மேற் கொண்டுள்ளார் பரஸ்பரம் இரு தரப்பு நலன் சார்ந்த பல விடயங்கள் குறித்து இரு வெளிவிவகார அமை ச்சர்களும் பேச்சுவார்த்தைகளை மேற் கொண்டுள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தை சந்தித்தவேளை இலங்கையின் பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்புவதற்கான இந்தியாவின் தொடர்ச்சியான ஆதரவு குறித்து இலங்கையின் 9வது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க பதவி யேற்ற பின்னர் இலங்கைக்கு வந்த உயர்மட்ட இராஜதந்திரி ஆவார்.

இந்தியாவின் அழைப்பை ஏற்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தனது முதலாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயத்தை புதுடில்லி க்கு மேற்கொள்ளவார் என தகவல் வெளியாகியுள்ளது. இந்தியாவிற்கு சென்று இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் கலந்துரையாடவுள்ள தாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பிரதமர், மற்றும் ரணில் விக்கிரமசிங்கா சஜித் பிரேமதாசா ஆகியோரையும் இந்திய வெளிவிவ கார அமைச்சர் சந்தித்திருந்தார்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# வாழ்வாதார உதவி கேட்ட பெண்மணிக்கு “சாராயச்சாலை” அனுமதி வாங்கிக் கொடுத்து உதவி செய்தாராம் விக்கி ஐயா!

வடக்கு கிழக்கு மாகணங்கள் எங்கும் மதுபானச்சாலைகளும் இளைஞர்கள் மத்தியில் போதைப் பாவனைகளும் சிங்கள அரசாங்கத்தால் திட்டமிட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்று இதுவரை இருந்த குற்றச்சாட்டாகும். ஆனால் தற்போது புதிய அரசு பொறுப்பேற்றதன் பின்னர் இத்தகைய செயற்பாடுகளில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் அடங்குவதாகத் தெரிய வந்து கொண்டிருக்கின்றது. தன்னை ஒரு தூய்மைவாதி என்று பீற்றித் திரியும் அயோக்கியத்தனம் நிறைந்த முன்னாள் அநீதியரசர் விக்கினேஸ்வரன் தான் செய்தது ஒரு சமூகக் கேடு என்பதை ஏற்றுக் கொள்ளாது தெரிவிக்கும் கருத்தினைப் பாருங்கள்.

மதுபான சாலை அனுமதியினை பெறுவதற்காக சிபாரிசு கடிதம் ஒன்றினையே வழங்கினேன் அதனை வைத்து ஏதோ பெரிய பூதம் இருப்பது போன்று காட்டமுயல்கின்றனர். அவை என்னை எதுவும் செய்யாது என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் நீதியரசர் சி. வி விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனது வீட்டில் கடந்த 30 செப் 2024 திங்கட்கிழமை ஊடகவியலாளர்கள் சிலரை சந்தித்த போதே அவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில் பெண்ணொருவர் என்னிடம் வந்து மதுபான சாலை ஒன்றின் அனுமதிக்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சிபாரிசு கடிதம் தேவை என கேட்டார். அவரின் பெற்றோர் எனக்கு



நன்கு அறிமுகமானவர்கள். அதனால் சிபாரிசு கடிதம் வழங்கினேன். அந்த கடிதம் கொடுத்தது உண்மை.

மதுபான சாலை அனுமதி பத்திரங்களை எடுத்து அதனை கோடி ரூபாய் கணக்கில் விற்பதாக கூறுகின்றார்கள். அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு அப்படி செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

அரசியல் ரீதியாக என்னை அடிக்க வேண்டும் என்பதற்காக சிபாரிசு கடிதம் கையளித்ததை வைத்து, ஏதோ பெரிய பூதம் இருப்பது போன்று காட்ட முனைகிறார்கள். அதெல்லாம் என்னை எதுவும் செய்யாது என மேலும் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க இதனிடையே கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் புதிய மதுபானச்சாலைக்கான உரிமம் ஒன்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான விக்னேஸ்வரன் ஊடாகப் பெற்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது. சி.வி.விக்னேஸ்வரன் கடந்த பெப்ரவரி 19 அன்று எழுத்து மூலம் வழங்கிய கடிதத்தின் அடிப்படையிலேயே மதுபான சாலைக்கான அனுமதி அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

தனுசா நடராசா என்னும் பெயரில் மதுபானசாலைக்கான அனுமதியை சி.வி.விக்னேஸ்வரன் பரிந்துரைத்துள்ளார். தனுசா முதலில் ஓர் இராணுவத்தில் பணியாற்றிய இராணுவ சிப்பாயை திருமணம் செய்திருந்த நிலையில் பின்னர் இராணுவ சிப்பாயை விவாகரத்து செய்துள்ளார். தற்பொழுது சமத்துவ கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய முருகேசு சந்திரகுமாருடன் வாழ்ந்து வருகின்றார்.

அதேவேளை தனுசாவிற்கு சொந்தமாக சுன்னாகம் இணுவில் மற்றும் கனகபுரம் பகுதிகளில் மதுபானச்சாலைகள் உள்ளதாக கூறப்படுகின்றது. தனுசாவின் தந்தையார் சுன்னாகத்தில் இருந்த பிரேமானந்தாவின் ஆச்சிரமத்தில் அவரது பக்தனாக இருந்தவர். இந்தியாவின் பாலியன் குற்றவாளியாக நீதிமன்றத்தால் கண்டறிப்பட்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட பிரேமானந்தாவின் இந்த அநீதியரசரும் சீடர் என்பதும் முதலமைச்சராக பதவியேற்றவுடன் இந்தியப் பிரதமர் மோடிக்கு பிரேமானந்தாவுக்கு பொதுமன்னிப்பு வழங்கும்படி கடிதம் எழுதிய வரலாற்றுப் பெருமை கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வடகிழக்கை மையப்படுத்தி நூற்றுக் கணக்கில் மதுபான சாலைகளை தெற்கு அனுமதித்துள்ளது. இந்நிலையில் மன்னார் – தலைமன்னார் பிரதான வீதி, எழுத்தூர் சந்திக்கு அருகாமையில் புதிதாக திறக்கப்பட்ட மதுபான சாலையை உடனடியாக இட மாற்றக் கோரி நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி மதுபானசாலைக்கு முன்பாக கடந்த 30 செப் 2024 திங்கட்கிழமை சவப்பெட்டியுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் மக்களின் கோரிக்கை அடங்கிய மகஜர் மாவட்ட செயலரிடம் கையளிக்கப்பட்டதுடன் அவரது வாக்குறுதிக்கமைய மக்கள் ஆர்ப்பாட்டத்தை கை விட்டுள்ளனர்.




கனடா – அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)
Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அனைத்து அம்பாள் அடியார்களிற்கும் வணக்கம்!

அருள்மிகு கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் இருப்பிடம் மற்றும் கும்பாபிசேகம் சம்பந்தமான முக்கியமான கலந்துரையாடல் 13 ஒக்டோபர் 2024 ஞாயிற்றுக்கிழமை மதியம் 2.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அங்கத்துவப் பணம் செலுத்திய அம்பாள் ஆலய அங்கத்தவர்களை கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். இதுவரை அங்கத்துவப் பணம் செலுத்தாதவர்கள் அங்கத்துவப் பணத்தைச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

ஓம் தாயே மகமாரி – நிர்வாகசபை 18 செப் 2024

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# வவனியாவில் போராட்டம் நடத்தியவர்களை அச்சுறுத்தியது ஜனாதிபதியின் ஆதரவாளரா? கட்சிக்கு அபகீர்த்தி ஏற்படுத்த செய்யப்பட்ட செயலென தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு!

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளினால் 01 ஒக்டோபர் 2024 முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தினை ஜனாதிபதி அனுரவின் ஆதரவாளர் எனக் கூறிய நபர் ஒருவர் குழப்பியமையால் பதட்டமான நிலமை ஏற்பட்டது.

சர்வதேச சிறுவர் தினத்தன்று காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் வவுனியா பழையபேருந்து நிலையப்பகுதியில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அந்த இடத்திற்கு வந்த இனம் தெரியாத நபர் ஒருவர் இது அனுரவின் ஆட்சி நீங்கள் எல்லாம் வயிறு வளர்க்கிறீர்கள். உங்களுக்கு பணம் வருகின்றது. என போராட்டத்தில் ஈடுபட்ட தாய்மாருடன் முரன்பாட்டில் ஈடுபட்டுள்ளார். உங்களை பொலிஸில் பிடித்து கொடுப்பேன். நான் அனுரகுமாரவுடனேயே இருவருடமாக நிற்கிறேன். பொலிஜிம் புலனாய்வு பிரிவும் வந்து இப்போது உங்களை கைது செய்வார்கள். நாய்களே எல்லாரும் வீடு செல்லுங்கள் என்று ஒருமையில் கண்டபடி திட்டியுள்ளார். இதனையடுத்து காணாமல் போன உறவுகளும் அவருடன் முரன்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் குறித்த பகுதியில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளதுடன் சிறிது நேரத்தின் பின்னர் குறித்த நபர் அவர்களை அச்சுறுத்தியபடி அந்த பகுதியில் இருந்து கலைந்து சென்றிருந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் அன்று மாலையே எமது கட்சிக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த சிலர் முயற்சி மேற்கொள்கின்றனர். அவ்வாறான செயற்பாடொன்றே இன்று




காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டத்தின் போதும் நடந்தது என தேசிய மக்கள் சக்தியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் உபாலி சமரசிங்க தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை மாலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்.

செவ்வாய்க்கிழமை காலை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது சிலர் இடையூறு ஏற்படுத்தியதோடு தாம் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் என பொய்யாக கூறி எமது கட்சிக்கு உள்ள நற்பெயரை கலங்கப்படுத்தவும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கோடும் செயற்பட்டிருந்தனர்.

தற்போது தமிழ் மக்கள் மத்தியில் தேசிய மக்கள் சக்திக்கு ஏற்படுகின்ற ஆதரவையும் நல்ல எண்ணத்தினையும் பொறுத்துக் கொள்ள முடியாத சிலர் இவ்வாறு கீழ்த்தரமான செயலில் ஈடுபட்டதை எண்ணி மனவருத்தமடைகின்றோம்.

இனி வரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடு இடம் பெறாத வகையில் எமது அரசாங்கம் அதனைப் பார்த்துக் கொள்ளும்.

தேர்தல் நெருங்கி வரும் காலங்களில் இவ்வாறான சேறு பூசும் நடவடிக்கைகளில் சிலர் ஈடுபட்டு வருகின்றமை தொடர்பில் நாங்கள் தமிழ் மக்களிடமும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களிடமும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

# கிளிநொச்சியை ஆளும் பார் வேந்தர்கள்!




கிளிநொச்சியில் கடந்த சில மாதங்களுள் முளைத்த மது பானச்சாலைகளது எண்ணிக்கை மக்களிடையே அதிர்ச்சியை தோற்றுவித்துள்ளது.

இந்நிலையில் மதுபானச்சாலை வைத்திருப்பவர்களின் விபரங்கள் வெளிவந்துள்ளது

கந்தசாமி கோவிலுக்கும் கரடிப் போக்கு சந்திக்கும் இடையில் உள்ள ஒரு பார் முன்னாள் முதலவர் விக்னேஸ்வரனுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த ஏ-9 வைன் ஸ்ரோர் என்ற பெயரில் திறக்கப்பட்டுள்ளது. ஆனாலும் தனை சந்திரகுமாரின் துணைவிக்கு வழங்கியதாக சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் துணைவியின் பெயரில் கரடிப் போக்கு சந்தியில் இரண்டு பார்கள் உள்ளன.

பரந்தனில் இருக்கும் இரண்டு பார்கள் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கயன் இராமநாதனின் சகோதரனின் பெயரில் இருக்கும் நிறுவனத்தின் பெயரில் உள்ளது.

அதேவேளை 55ஆம் கட்டைக்கு அருகில் தொண்டமானநகரில் அங்கயனின் தந்தை இராமநாதனின் பெயரில் ஒரு பார் திறக்கப்பட்டுள்ளது.

கனகபுரம் வீதியில் உள்ளது தான் கிளிநொச்சியில் அதிகவிலைக்கு விற்கப்பட்ட மதுபானச்சாலையாகும். இது முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தம்பியும் பினாமியுமான தயானந்தாவின் பெயரில் உள்ளது. பூநகரி சந்தியில் உள்ள ஒன்று மதுபானச்சாலை சாராய நிறுவனத்தின் பெயரில் உள்ளது. இது யாழில் நகரில் ஏற்கனவே மது பானச்சாலை வைத்திருக்கும் நபர் தான் வாங்கியிருக்கிறார். கொழும்பை சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவரால் கனகபுரம் வீதியில் ஒன்று புதிதாக திறக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலுக்கு பக்கத்தில் உள்ள பார் புலம்பெயர் வாழ் பிரபல தமிழ் வர்த்தகர் பெயரில் உள்ளது. அதுவும் ஒரு சாராய நிறுவனத்தின் பெயரில் தான் பதிவு உள்ளது. எனினும் மதுபானச்சாலையொன்றை வைத்திருப்பதாக பிரச்சாரப்படுத்த தமிழரசு நாடாளு மன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பேரில் எந்தவொரு மதுபானச் சாலையும் இருக்கின்றமை உறுதிப்படுத்தப்படவில்லை.

# தமிழ்த் தேசியக் கட்சிகளின் கவனத்திற்கு!

அரசியல் தலைவர்கள் என்போர் மாற்றங்களை உற்று நோக்கப் பழக வேண்டும். மாற்றங்களை உற்று நோக்குவதற்கு பின் நிற்பவர்கள் தயக்கம் காட்டுபவர்களால் தாங்கள் தலைமை தாங்கும் கட்சியை முன்கொண்டு செல்ல முடியாது.

கடந்த 2019 ஜனாதிபதித் தேர்தலில் மூன்று வீத வாக்கு களை பெற்றிருந்த அனுரகுமாரதிசாநாயக்க மாற்றங்களை துல்லியமாக உற்றுநோக்கி, அதற்கேற்ப அரசியலை முன்னெடுத்த காரணத்தினாலேயே இப்போது அதிகாரத்தை கைப்பற்ற முடிந்தது. இன்று நாடு தழுவிய வகையில் புதிய அரசியல் கலாசாரத்திற்கான அலையொன்று உருவாகி வருகின்றது. இந்த அலையோடு மிதந்து செல்லும் உத்தி தொடர்பிலேயே தமிழ் தேசியக் கட்சிகள் என்போர் சிந்திக்க வேண்டும்.

அண்மையில் இலங்கை தமிழ் அரசுக்கட்சி வெளியிட்ட அறிவிப்பு வரவேற்கத்தக்கது அதாவது. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்களுக்கு இம்முறை ஆசனம் இல்லை. இது ஒரு நல்ல பரிந்துரை. புதியவர்களை உள்வாங்கி, தலைமைத்துவத்தை மேம்படுத்துவதற்கு இவ்வாறான பரிந்துரைகள் பயனுடையது. இதனை ஏனைய கட்சியினரும் பின்பற்றலாம்.

மூத்த உறுப்பினர்களை முற்றிலுமாக ஒதுக்கி விட வேண்டும் என்பதல்ல இதன் பொருள் மாறாக. அவர்களை தேசிய பட்டியிலில் உள்ளடக்கலாம். அவர்கள் புதியவர்களுக்கு வழிகாட்டுபவர்களாக இருக்க முடியும். தேர்தல் போட்டிக்கு தயார்படுத்தும் அனைத்து கட்சிகளும் இந்த விடயத்தை கருத்தில் கொள்ள வேண்டும். தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் ஏனைய கட்சிகள் அனைவரும் இந்த விடயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும்.

மாற்றங்களை அனுசரித்து நடக்க வேண்டும். காலம் மாறும் போது, அதற்கேற்ப சிந்திக்கவும் செயற்படவும் வேண்டியது கட்டாயமானது. தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் நீங்கலாக ஏனையவர்கள் அனைவரும் தங்களுடைய முகத்தை சற்று பின்னுக்கு வைத்துக் கொள்வது நல்லது. நாற்பது வருடங்கள் அரசியலில் இருந்தோம் என்று கூறும் பழைய பல்லவிகளை விடுத்து, கடந்த நாற்பது வருடங்கள் எதைச் சாதிக்க முடிந்தது என்னும் கேள்விக்கான பதிலிலிருந்தே தாங்கள் தொடர்ந்தும் இருக்க வேண்டுமா என்னும் கேள்விக்கான பதிலை உற்றுநோக்க வேண்டும்.

சில தேவையானவர்களை வைத்துக் கொண்டு புதியவர்களை உள்வாங்குவதன் ஊடாக, அரசியலை சுத்தம் செய்யும் போக்கொன்றை ஏற்படுத்துவதற்கு தமிழ்த் தேசிய கட்சிகள் முன்வர வேண்டும். இதனை மறுத்து செயல்பட எண்ணினால் நகைப்புக்கிடமான தேர்தல் பெறுபேறுகளையே பெற நேரிடும்.

தமிழ் அரசுக் கட்சி மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியவை தங்களின் முகங்களை முடிந்தளவு மாற்ற முயற்சிக்க வேண்டும். அண்மையில் சி. வி.விக்னேஸ்வரன், அடுத்த தேர்தலில் போட்டியிடுவதில்லை என்னும் முடிவை அறிவித்திருந்தார். இது வரவேற்கத்தக்க ஒரு விடயம். இது போன்ற செய்திகளையே ஏனைய மூத்த, உடல் ரீதியில் பலவீனமாக இருக்கும் அரசியல்வாதிகள் தங்களின் நிலையை மற்றவர்கள் தங்களுக்குச் சுட்டிக்காட்டும் நிலைக்கு ஆளாகாமல், மாற்றங்களின் முன்னோடியாக மாற வேண்டும். தமிழ் அரசியலில் மாற்றங்களின் ஆரம்பம் இவ்வாறு தான் நிகழும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
32வது ஆண்டு விழா
சங்கீத சங்கமம் 2025
ஏப்ரல் 06 ஞாயிற்றுக்கிழமை
விபரங்களுக்கு
ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# திருகோணமலை - மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் வாக்குகள் சிதறுமானால் தமிழர் பிரதிநிதித்துவம் பறிபோகும் அபாயம்

ஒவ்வெரு அரசியல் கட்சிகளும் தமது அரசியல் என்ற தொனியில் சென்று கொண்டு இருக்கின்றார்கள். அரசியல் தலைவர்களும் அவ்வாறே இருக்கின்றார். எதிர்வரும் பொதுத் தேர்தலில் அனைத்து தமிழ் தேசிய கட்சிகளும் இதய சுத்தியுடன் ஒன்றிணையா விட்டால் மிக பாரதூரமான விளைவுகளை தமிழ் அரசியல் சந்திக்க வேண்டிய நிலை உருவாகும். என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அருண்மொழிவர்மன் தம்பிமுத்து கடந்த 30 செப் 2024 திங்கள்கிழமை மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.



அவர் மேலும் கூறுகையில், திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் தமிழர்களின் வாக்குகள் சிதறும் நிலை உருவானால் தமிழர்களின் பிரதிநிதித்துவம் இல்லாமல் போய் விடும். சென்ற பாராளுமன்ற தேர்தல் நாம் இதைப் பார்த்தோம்.

இப்போது ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் தமது அரசியல் என்ற தொனியில் சென்று கொண்டு இருக்கின்றார்கள். அரசியல் தலைவர்களும் அவ்வாறே இருக்கின்றார். தமிழ் மக்களிடையே பொதுவாக அவர்களால் பேசப்படும் கருத்து நாம் எல்லாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பது. இதனை தமிழ் தேசிய கட்சிகள் வெளிப்படை தன்மையுடன் கூறுவதில்லை. கடந்த ஜனாதிபதி தேர்தலில் பல கட்சிகள் ஒன்றினைந்து கேட்ட வேட்பாளரை விட தனித்துவமாக போட்டியிட்ட அனுரகுமார அவர்களுக்கு சிங்கள மக்கள் அதிகமான வாக்குகளை கொடுத்திருந்தார்கள். இன்று எம்முள் உள்ள கேள்வி நாங்கள் ஒன்றினைய வேண்டும் என்று ஒரு நிலைப்பாடு இருக்கும் நிலையில் போட்டியிடுபவர்கள் யார்?. மக்கள் மத்தியில் இருக்கும் கேள்வி என்னவென்றால் அதே நபர்கள் தொடர்ந்து இருப்பது தானா. இன்று ஊடகங்களில் வெளியாகி கொண்டிருக்கும் ஊழல் சம்மந்தமான விடயங்கள், சாராய பேர்மிட் வழங்கப்பட்டதாகவும், வாகன பேர்மிட் வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. உண்மையில் இதற்கு உரிய நபர்கள் வெளிப்படைத் தன்மையுடன் பொறுப்பு கூற வேண்டும். சிங்கள தேசம் தனது நிலைப்பாட்டில் தெளிவாக இருக்கின்றது. நான் கூட சிங்கள தேசிய அரசியல் ஊடாக தமிழ் மக்களின் அரசியலை முன்னெடுக்க லாம் என்று நம்பியவன். ஆனால் 10 ஆண்டுகளாக நான் கட்ட அனுபவம் என்னவென்றால் சிங்கள தேசம் தனது நிலைப்பாட்டில் தெளிவாக இருக்கின்றது.

ஈழத்தில் உள்ள அனைத்து இடங்களிலும் தமிழ் மக்கள் சிறுபான்மையினராக வாழ தயாராக இருக்க வேண்டும் என்பதே சிங்கள தேசியத்தின் நிலைப்பாடாகும்.

இன்று காணி சீர்திருத்தம் என்ற ஒரு விடயத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். வடக்கு கிழக்கில் காணி சீர்திருத்தம் எனும் பெயரில் காணிகள் அபகரிக்கப்பட்டு வந்த வரலாறு எமக்கு தெரியும் அதை தொடர மாட்டோம் என்று அனுரகுமார திசாநாயக்க அவர்களின் கட்சி தெரிவித்தாலும் கூட அவர்கள் காணி சீர்திருத்த திட்டத்தை வைத்திருக்கின்றார்கள் என்ற உண்மையை நாங்கள் உணர வேண்டும். என மேலும் தெரிவித்தார்.

## துறைமுக அதிகாரசபையின் தலைவராக முன்னாள் கடற்படைத் தளபதி சிறிமேவன் ரணசிங்க நியமனம்

இலங்கை துறைமுக அதிகார சபையின் புதிய தலைவராக முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் சிறிமேவன் சரத்சந்திர ரணசிங்க பதவியேற்றார்.

1982 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் திகதி இலங்கை கடற்படையின் 11 வது உள்வாங்கலில் அதிகாரி கேடட்டாகப் பதிவு செய்தார்.

ரணசிங்க 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் 26 ஆம் திகதி கடற் படைத் தளபதியாக நியமிக்கப்பட்டு 2019 ஜனவரி 1 ஆம் திகதி ஓய்வு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி, முப்படை தளபதிகள் மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் ஆகியோர், பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் தூய கொந்தாவுடன் கலந்துரைனார்கள்.




In Person & Online Classes
(In Person Classes are available in Brampton)

Math & Physics Tutoring
(For High School Students)



Math: Grade 9, 10, 11, & 12 (Advanced Functions, Calculus & Vectors and Data Management) Physics: Grade 11 & 12
Special Classes for IB, AP & University Students

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி. இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# பங்காளிக் கட்சிகளுக்கு சுமந்திரன் சவால்

தமிழரசுக் கட்சியுடன் பங்காளி கட்சிகள் இணைய விரும்பா விட்டால் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியாக தனித்து களமிறங்கவுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.யு. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் தமிழரசுக் கட்சியின் பெயரில் தேர்தலில் இணைந்து போட்டியிடுவதற்கு அழைப்பு விடுத்திருந்தோம்.

அழைப்பை ஏற்றுக் கொள்ளா விட்டால் தனித்து தேர்தலை எதிர்கொள்வோம். நாங்கள் அண்மையில் எமது தமிழரசுக் கட்சியின் கூட்டத்தில் மேற்கொண்ட தீர்மானத்தினடிப்படையில் ஏற்கனவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்த கட்சிகள் அனைவரையும் கட்சிக்கு வருமாறு இலங்கை தமிழரசு கட்சியால் அழைப்பு விடுக்கப்பட்டது.




அத்துடன், இலங்கை தமிழரசுக் கட்சியின் பெயரிலும் தமிழரசு கட்சியின் சின்னத்திலும் தேர்தலில் போட்டியிடுவதற்கும் அழைப்பு விடுப்பதாக தீர்மானித்து இருந்தோம். அப்படி அவர்கள் வரா விட்டால் இலங்கை தமிழரசுக் கட்சி ஆகிய நாங்கள் தனித்து போட்டியிடுவதாகவும் ஏற்கனவே தீர்மானம் எடுத்திருந்தோம்.

ஆகவே நியமனப் பத்திரம் தாக்கல் செய்வதற்கு இன்னும் சிறிது காலமே இருப்பதால் அவர்களும் தங்கள் முடிவுகளை துரிதமாக தெரியப்படுத்த வேண்டும்.

வெகு விரைவில் அன்று நாங்கள் நியமித்த நியமன குழு கூடி அவர்கள் இணங்கி வரவில்லை என்றால் அவற்றைக் கருத்தில் எடுத்து தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களை நாங்கள் தீர்மானிப்போம். எதிர்வரும் தேர்தலில் இளைஞர்கள் யுவதிகள் ஆற்றல் உள்ளவர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்பதுடன், ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்து மீண்டும் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுற்றவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதில்லை என்ற தீர்மானத்தையும் மேற்கொண்டுள்ளோம் என்றும் சுமந்திரன் மேலும் தெரிவித்தார்.

# ஒற்றுமையாகப் போட்டியிட முயற்சி செய்கின்றோம்
# இந்தியத் தூதுவருக்கு தமிழ்கட்சித் தலைவர்கள் வாக்குறுதி



தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

குறித்த சந்திப்பின் போது கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட்ட போது எங்களுக்குக் கசப்பான அனுபவங்கள் உள்ளன. இருந்தாலும் அவை தொடர்பில் பேசி கூட்டாகப் போட்டியிட முயற்சிகள் எடுப்போம் என தமிழரசு, ரெலோ, புளொட் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய கட்சிகளின் தலைவர்கள் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவிடம் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் நிலைப்பாடு தொடர்பில் இந்தியத் தூதுவர் அவர்களிடம் கேட்டறிந்து கொண்டுள்ளார்.

இதன்போது அவருக்குப் பதிலளித்த தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், 'நாடாளுமன்றத் தேர்தலைத் தமிழ்த் தேசியக் கட்சிகள் தனித் தனியாக எதிர் கொள்வதால் வாக்குகள் சிதறடிக்கப்படும். இதனால், பிரதிநிதித்துவத்தை இழக்காத வகையில் ஒன்றாகப் போட்டியிடவே விரும்புகிறோம். எனினும், இது உடனடியாகச் சாத்தியமில்லை. கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட்ட போது எங்களுக்குக் கசப்பான அனுபவங்கள் உள்ளன. இருந்தாலும் அவை தொடர்பில் பேசி கூட்டாகப் போட்டியிட முயற்சிகள் எடுப்போம்' என குறிப்பிட்டுள்ளனர்.

பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பித்த இந்தச் சந்திப்பு சுமார் ஒன்றரை மணிநேரம் நீடித்திருந்தது. இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கம், தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் கட்சியின் தலைவர் த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

# அநுர அரசுடன் சர்வதேச நாணய நிதியக் குழு பேச்சுவார்த்தை

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்துடன் இணைந்ததாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கத்தின் எதிர்கால செயற்திட்டம் குறித்து ஆராய்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்டக் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்தது.

ஐ.எம்.எப். திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் 2.9 பில்லியன் டொலர் நீட்டிக்கப்பட்ட நிதி வசதியின் நான்காவது தவணையை பெறுவது பற்றி (19ம் பக்கம் பார்க்க)



# வடக்கு கிழக்கில் ஜே.வி.பி

ஜே.வி.பி தொடர்பில் வடக்கு, கிழக்கில் குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியில் ஆர்வம் ஏற்பட்டிருப்பதான தோற்றம் தெரிகின்றதா? இதுவரையில் தேசிய கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சி மற்றும் சிறீலங்கா சுதந்திர கட்சி தமிழ் மக்கள் மத்தியில் ஊடுருவும் செயல்பாடுகளை முன்னெடுத்து வந்திருக்கின்றன.

அண்மைக் காலத்தில் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ராஜபக்ஷக்களின் பொதுஜன பெரமுன ஆகியவை தங்களுக்கான ஆதரவுத்தளத்தை பெருக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தன.

தமிழ் மக்கள் மத்தியில் தென்னிலங்கை கட்சிகள் ஆதரவை பெறுவதற்கு இரண்டு வழிமுறைகளை மேற்கொள்வதுண்டு. ஒன்று நேரடியாக உள்நுழைவது. இரண்டாவது தங்களுடன் கூட்டு வைத்திருக்கும் கட்சிகளுக்குள்ளால் நுழைவது கட்சிகளுக்குள்ளால் நுழைவது தான் அதிகம். அரசாங்கங்களுடன் கூட்டு வைத்துக் கொள்ளும் கட்சிகளுக்குள்ளால் தான் அதிகம் இவ்வாறான உள்நுழைவு இடம்பெறுவதுண்டு

இந்த வரிசையில் தற்போது ஜே. வி. பியும் இடம் பிடித்திருக்கின்றது. ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஜே. வி. பியின் ஸ்தாபகர் ரோகண விஜயவீர பேசிக் கொண்டிருக்கும்போது கல்லால் அடிக்கப்பட்டார். காயத்திலிருந்து வடிந்து கொண்டிருந்த இரத்தத்தையும் துடைக்காமல் விஜயவீர பேசிக் கொண்டிருந்தார்.

இன்று நிலைமைகள் வேறு. இன்றைய ஜே. வி. பி. அதிகார அரசியலின் அங்கமாகியிருக்கின்றது. அதிகார அரசியலுக்குள் வந்து விட்டால் அதனை பேணிப் பாதுகாப்பதற்கு பணியாற்ற வேண்டிய நிரப்பந்தம் ஏற்பட்டுவிடும்.

இந்தப் பின்புலத்தில் ஜே. வி. பியும் தங்களுக்கான தமிழ் ஆதரவுத்தளத்தை பெருக்கிக் கொள்ள முயற்சிக்கும். ஏனைய தென்னிலங்கை கட்சிகளைப் போல், ஜே. வி.பியும் தமிழ் மக்களின் வாக்குகளை பெறும் உத்திகளை கையாளும்.

குறிப்பாக இளைய தலைமுறையினரே ஜே. வி. பியின் பிரதான இலக்காகும். எவ்வாறான விமர்சனங்களை முன்வைத்தாலும் தென்னிலங்கை கட்சிகளுக்கு வாக்களிக்கும் தமிழ் மக்கள் இருக்கின்றனர். தமிழ்த் தேசிய அரசியலை அவர்கள் ஒரு விடயமாக எடுப்பதில்லை.

அரசாங்கத்திலுள்ள கட்சிகளை ஆதரித்தால், அவர்கள் மூலம் நன்மை கிடைக்குமென்று மக்கள் நம்புகின்றனர். அவ்வாறு நம்புமளவுக்கு மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். தமிழ்த் தேசியம் பேசும் அரசியல்வாதிகளும் மக்களின் அன்றாட பிரச்னைகளை உற்று நோக்குவதில்லை. ஆகக் குறைந்தது அந்தப் பிரச்னைகள் தொடர்பில் ஆறுதலாக உரையாடுவதும் இல்லை. தேர்தல் காலத்தில் மட்டும் தான் தமிழ்த் தேசியர்கள் மக்களை சந்திப்பது உண்டு. இதன் காரணமாக மக்கள் கோபமடைந்திருக்கின்றனர். இவ்வாறு கோபமடைந்திருக்கும் மக்கள் தங்களின் கோபத்தை காண்பிப்பதற்கு தென்னிலங்கை அரசியல்வாதிகளை நோக்கிச் செல்வது உண்டு. இந்த இடைவெளிகளையே தென்னிலங்கை கட்சிகள் பயன்படுத்திக் கொள்கின்றன.

அநுரவின் வெற்றியைத் தொடர்ந்து, ஜே. வி. பி. அரசாங்கம் அதிரடியாக முன்னெடுத்து வரும் சில விடயங்கள் மக்களை கவர்வனவாகவே இருக்கின்றன. தமிழ் மக்களும் கவரப்படுகின்றனர். இந்தக் கவர்ச்சியை பயன்படுத்தி தமிழ் மக்கள் மத்தியில் உள்நுழைவது தொடர்பில் ஜே.வி. பி. அதிக அக்கறை காண்பிக்கும்.

முக்கியமாக தமிழ் இளையோரை இலக்கு வைத்துச் செயல்படும். தமிழ்த் தேசியர்களின் ஆகக் குறைந்தது இளைஞர் கட்சிக் கட்டமைப்புக் கூட இல்லை. பெண்களுக்கான செயல்திட்டங்கள் இல்லை. இந்த நிலையில் தமிழ் மக்கள் மத்தியில் ஜே. வி. பி. செல்வாக்கை பெற்றால் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

தமிழ் அரசியல் கட்சிகள் விழித்துக் கொள்ளாவிட்டால் நிலைமை தலை கீழாகும். தமிழ் அரசியல் கட்சிகள் பலவற்றில் நம்பிக்கைக்குரிய இரண்டாம் தலைமுறை தலைவர்கள் இல்லை. இளைஞர்களை ஆகர்ஷிக்கக்கூடிய ஆளுமைகள் இல்லை. இருப்பவர்களில் அநேகர் ஓய்வுதிய காலத்தையும் அதிகம் தாண்டியவர்கள். இவ்வாறானவர்களைக் கொண்டு புதியதோர் அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்த முடியாது.

# "பதவியே வேண்டாம்" என்று முழங்கிய ஈழத்துக் காமராஜர் தமிழ் பொதுவேட்பாளர் அரியநேந்திரனுக்கு தேசியப்பட்டியல் எம்.பி. பதவி கொடுக்கப்படுவதே அரசியல் அறமாம்!



பாராளுமன்ற பொதுத்தேர்தலில் தமிழ் பொதுக்கட்டமைப்பாக போட்டியிடுகின்ற நாம் பெற்றுக்கொள்ளும் முதலாவது தேசியபட்டியல் உறுப்புரிமையினை பா.அரியநேந்திரனுக்கு வழங்குவதே அரசியல் அறமாகும் என்பதனை போராளிகள் சார்பாக நாங்கள் வலியுறுத்துகின்றோம் ஜனநாயகபோராளிகள் கட்சியின் செயலாளர் க. துளசி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழர் தரப்பு தம்மை ஒரு தேசியமாக திரட்டி தமிழினத்தின் இனப்பிரச்சனைக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தி தமது வாக்குகளை தமிழ் பொது வேட்பாளருக்கு கணிசமாக வழங்கியிருந்தனர்.

அந்த வகையில் இவ்வகையான கருத்துருவாக்கத்திற்கு தமிழ் பொதுச் சபையினரும் தமிழ்தேசிய அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து தமிழ் பொதுக்கட்டமைப்பாக காத்திரமாக செயலாற்றி இருந்தனர். அதிலும் குறிப்பாக வடக்கு கிழக்கின் சிவில் பொதுச்சபையினர் ஆற்றிய பணிகள் இனத்தின் இன்றைய காலத்தேவையாகும்.

தமிழ் தேசிய கட்சிகளை ஒன்றிணைக்கின்ற போதும் பொதுவேட்பாளர் தேர்வின் போதும் பின்னரான தேர்தல் பரப்புரைகளின் போதும் அவர்கள் ஆற்றிய பணிகள் மகத்தானவை.

அந்த வகையில் எமது தமிழ்பொது வேட்பாளர் பா.அரியநேந்திரன் அவர்கள் காலத்தின் தேவை உணர்ந்து எவ்வித எதிர்பார்ப்புமின்றி தமிழினத்தின் எதிர்காலம் கருதி அவர் செயலாற்றியதை தமிழின வரலாறு குறித்து வைத்துக் கொள்ளும். வருகின்ற பாராளுமன்ற பொதுத்தேர்தலில் தமிழ் பொதுக்கட்டமைப்பாக போட்டியிடுகின்ற நாம் பெற்றுக் கொள்ளும் முதலாவது தேசியபட்டியல் உறுப்புரிமையினை பா.அரியநேந்திரனுக்கு வழங்குவதே அரசியல் அறமாகும் என்பதனை போராளிகள் சார்பாக நாங்கள் வலியுறுத்துகின்றோம் என்றார்.

இது இவ்வாறிருக்க சி.வி விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தனித்து போட்டியிடுவதாக அறிவித்துள்ளது. தமிழ் மக்கள் கூட்டணியின் மத்திய குழுக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சீ.வி. விக்னேஸ்வரனின் இல்லத்தில் இடம் பெற்றது.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலை எதிர் கொள்வது தொடர்பில் இதன் போது ஆராயப்பட்டது. இதன்போதே ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியோடோ, இலங்கை தமிழரசுக் கட்சியோடோ இணைந்து போட்டியிடப் போவதில்லை எனவும், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணி தனித்து போட்டியிடுவதென முடிவெடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

# "பார் பெர்மிட்" பெற்ற எம்.பி.க்கள் பட்டியலை அரசாங்கம் வெளியிட வேண்டுமென சுமந்திரன் வேண்டுகோள்!

முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் மதுபானசாலை அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் விபரங்களை அரசாங்கம் வெளியிட வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டின் பல பகுதிகளில் மதுபான நிலையங்கள் திடீர் என அதிகரித்துள்ளமை குறித்த சர்ச்சை காணப்படும் நிலையில் இந்த விடயத்தில் வெளிப்படை தன்மை காணப்படவேண்டும் என சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மதுபானசாலைகளை திறப்பதற்கு பரிந்துரை செய்த நபர்களின் பெயர் விபரங்களை அரசாங்கம் வெளியிட வேண்டும் என சுமந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளவிய ரீதியில் மதுபானசாலைகள் குறித்த பரந்துபட்ட விவகாரம் காணப்படுகின்றது இவற்றிற்கு அனுமதிப் பத்திரத்தை வழங்குமாறு பரிந்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல்வாதிகள் யார் என்பது மக்களிற்கு தெரிய வேண்டும் என தெரிவித்துள்ள சுமந்திரன், எதிர்வரும் தேர்தலிற்கு முன்னர் இதனை பகிரங்கப்படுத்தவேண்டும், இதன் மூலம் இந்த விடயத்தில் தொடர்புபட்டுள்ளவர்கள் பதவியிலிருந்து அகற்றப்படுவதை உறுதி செய்யலாம் என குறிப்பிட்டுள்ளார்.

மதுபானசாலைகள் அதிகரிப்பு என்பது சமூக பிரச்சினை ,இது இளம் தலைமுறையினருக்கு மோசமான பாதிப்பை ஏற்படுத்தும் மதுபானசாலைகளை விஸ்தரிப்பதில் நேரடியாக தொடர்புபட்ட அரசியல்வாதிகளை மக்கள் முன் அம்பலப்படுத்த வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.



வாழ்வாதார உதவி கேட்டு வந்த பெண்ணுக்கு பார் அனுமதிப்பத்திரம் கொடுத்தேன் என்று கொஞ்சமும் தயக்கமின்றித் தெரிவித்துள்ள முன்னாள் எம்.பி. விக்கினேஸ்வரன் சுமந்திரன் அவர்களின் குரு என்பதும் வெட்கக் கேடான விடயமாகும். அடிக்கடி சுமந்திரனை தனது மாணவன் என்று பெருமைப்பட்டுக் கொள்பவர் விக்கினேஸ்வரன்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# பாராளுமன்றத் தேர்தல்:- தப்பிப் பிழைப்பாரா அநுரகுமார?

– அழகு குணசீலன் –

இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பாராளுமன்றத்தை கலைத்து புதிய தேர்தலை அறிவித்துள்ளார்.

ஜனாதிபதியைப் பொறுத்த மட்டிலும், அவரின் ஜே.வி.பியை பொறுத்த மட்டிலும் இது தவிர்க்க முடியாத ஒன்று. ஏனெனில் அவர்கள் மக்களுக்கு வழங்கிய மாற்றத்தை செயல்படுத்த நிறைவேற்று அதிகாரம் மட்டும் போதாது, அரசியல் அமைப்பு சட்டசரத்துக்களைப் பொறுத்து பாராளுமன்றில் சாதாரண பெரும்பான்மை (113) முதல் மூன்றில் இரண்டு (150) பெரும்பான்மை வரை தேவை. இவை எல்லாவற்றையும் விடவும் புதிய ஜனாதிபதியினதும், அவரது கட்சியினதும் எதிர்கால அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கின்ற ஒன்றாகவும் இந்த பாராளுமன்ற தேர்தல் அமையப் போகிறது.

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் அநுரகுமார, சஜீத், ரணில், நாமல், அரியநேத்திரன் ஆகியோருக்கு வாக்களிக்குமாறு மக்களுக்கு அந்த வேட்பாளர்களை சிபார்சு செய்த கட்சிகள் இப்போது அந்த வாக்குகளை தங்கள் தங்கள் கட்சிகளுக்கு அளிக்குமாறு கோரப் போகின்றன. இதனால் கடந்த ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை பாராளுமன்ற தேர்தலுக்கான வெள்ளோட்டமாக கணித்து முன்னெப்போதும் இல்லாதவாறு இப்போது அரசியல் ஐக்கியம் ஒற்றுமை பற்றி பேசப்படுகிறது. ஜனாதிபதி தேர்தலை தொடர்ந்து ஏற்பட்டுள்ள ஸ்த்திரமற்ற அரசியல் சூழல் இந்த ஒற்றுமை கூக்குரலுக்கு காரணமாகிறது. இந்த அரசியலை "பாராளுமன்றம் கூடினால் சண்டை, கலைந்தால் ஒற்றுமை'' என்று சொல்லலாம் . ஏனெனில் கடந்த காலங்களில் கட்சி கதிரை அரசியலை தவிர்த்து பலதரப்பும் நாட்டின் நலன் கருதி, ஒற்றுமையாக செய்யப்பட்டிருந்தால் இலங்கைக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்காது.

சுடச்சுட எம் முன்னால் உள்ள ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை அடிப்படையாக கொண்டு நோக்கினால் வீகிதாசார ரீதியான பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் எவ்வாறு அமையலாம் என்று ஓரளவுக்கு எதிர்வு கூற முடியும். ஜனாதிபதி தேர்தல் பாராளுமன்ற தேர்தலில் இருந்து முற்றிலும் வேறுபட்ட காரணிகளால் நிர்ணயிக்கப்படுவதாக உள்ள போதும், ஒரு எதிர்வு (கூடிய-குறைந்த: +/- ) கூறலாக மட்டும் இதைக் கொள்ளலாம்.

ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் எமக்கு சொல்லும் செய்தி இது.

அநுரகுமார திசாநாயக்க: 40 வீதம் .

சஜீத் பிரேமதாச. 32 வீதம்

ரணில் விக்கிரமசிங்க.: 18 வீதம்

ஏனேயோர் 10 வீதம்

இந்த ஒழுங்கில் இவர்களின் கட்சிகள், கூட்டணிகள் பெறக்கூடிய பாராளுமன்ற எம்.பி.க்களின் எண்ணிக்கை ஏறக்குறைய இவ்வாறு அமைய முடியும்.

அநுரகுமார திசாநாயக்க: 90 பாராளுமன்ற உறுப்பினர்கள்.

சஜீத் பிரேமதாச. 75 பாராளுமன்ற உறுப்பினர்கள்.

ரணில் விக்கிரமசிங்க: 40 பாராளுமன்ற உறுப்பினர்கள்.

ஏனையோர். 20 பாராளுமன்ற உறுப்பினர்கள்.

மொத்தம். 225 பாராளுமன்ற உறுப்பினர்கள்.

இதிலிருந்து புதிய பாராளுமன்றம் ஒரு நிலையான ஸ்திரத்தன்மையை அரசியலில் நிலைநாட்டுமா? என்ற கேள்வியை எழுப்ப வேண்டி உள்ளது. நாற்பது வீதம் மக்களால் தேர்வு செய்யப்பட்ட சமநேரத்தில் அறுபது வீதம் மக்களால் நிராகரிக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒரு ஜனாதிபதியின் தொங்குபால ஆட்டம் காணும் அரசியல் இது.

மேற்குறிப்பிட்ட இந்த வாக்குகளுக்குள் சிபார்சு கட்சிகளின் ஆதரவு வாக்குகளும் உள்ளடங்குகின்றன. இவற்றில் சில வருகின்ற பாராளுமன்ற தேர்தலில் கூட்டுக்குள்ளும் இருக்கலாம், கூட்டுக்கு வெளியேயும் இருக்கலாம். இன்னொரு வகையில் ஜனாதிபதி ஆதரவு 40 வீதம் வாக்குகள் 90 எம்.பி.க்களை அவருக்கு பெற்றுத் தரும் நிலையில் அவரை நிராகரித்த 60 வீதம் வாக்குகள் எதிர்தரப்புக்கு 150 எம்.பி.க்களை பெற்றுக் கொடுக்க முடியும்.

எனவே எதிர்கட்சிகள் தப்பித 'தவறி மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றாலும் சாதாரண பெரும்பான்மைக்கே தடுமாறும் அநுரகுமாரவின் அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற முடியாது. பிரதமர் எதிர்க்கட்சியில் இருந்து தெரிவு செய்யப்படலாம். இந்த நிலையில் பிரதமர் ஒரு கட்சியிலும், ஜனாதிபதி ஒரு கட்சியிலும் இருக்கின்ற ஒரு அரசையே எதிர்பார்க்க முடியும். இது நடந்தால் சஜீத் பிரேமதாசவே பிரதமர் ஆகும் வாய்ப்பு அதிகமாக உண்டு. இதற்கு மாறாக நடப்பதாயின் ஜனாதிபதி தேர்தலில் நடந்தது போன்று ஒரு "அரசியல் அதிசயம் நடக்க வேண்டும். அது சாத்தியமற்றது என்று முற்றாக நிராகரிக்கவும் முடியாது. அது மக்களின் கைகளில் இருக்கிறது.

ஆனால்! அந்த மக்கள் யார்? அவர்கள் எதிர்கட்சி ஆதரவு வாக்காளர்கள். சிறுபான்மை சமூகங்களையும், அவை சார்ந்த கட்சிகளையும் சேர்ந்தவர்கள். மேலும் ரணில்,சஜீத், ராஜபக்சே ஆதரவாளர்கள். அவர்களை எதிர்வரும் ஒன்றரை மாதங்களில் ஜனாதிபதியினால் தன்வசப்படுத்த முடியுமா? என்பது மிக மிக முக்கியமான கேள்வியாகும். அரசியல் அனுபவமற்ற, சாதாரண மக்களில் இருந்து விலகிவாழ்ந்த, பலகலைக்கழக பேராசிரியர்களின் பல்துறை நியமனங்கள் மூலம் மட்டும் இது சாத்தியமா? அதுவும் இவர்கள் பலரும் ஏதோ ஒருவகையில் பல்கலைக்கழக காலத்தில் இருந்து ஜே.வி.பி.யுடன் இணைந்து செயற்பட்டவர்கள். கிழக்கு மாகாண ஆளுநரும் அவர்களில் ஒருவர். பேராசிரியர் மேலங்கிக்குள் அரசியல் நியமனங்கள் ஜே.வி.பி.யால் மறைக்கப்படுகின்றன இந்த தொங்குபால அரசியல் எதிர்பார்ப்பே கட்சிகளின் ஐக்கியத்திற்கான கூக்குரலுக்கு காரணம். ஒற்றுமையாக ஒரே சின்னத்தில் தேர்தலை எதிர்கொள்வதன் மூலம் மொத்த வாக்குகளை அதிகரித்து தேசிய பட்டியல் ஊடாகவும் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க அவை வியூகம் வகுக்கின்றன. ரணில் — சஜீத் ஒன்றிணைவு, உள்ளும், புறமும் பிரிந்து நிற்கின்ற முஸ்லிம் கட்சிளை ஒன்றிணைத்தல், அதேபோன்று பிரிந்து நிற்கின்ற தமிழ்த்தேசிய கட்சிகளை ஒன்றிணைத்தல் போன்ற கூட்டுக் கோரிக்கைகள் எழுந்துள்ளன. ஜனாதிபதி தேர்தலில் பிரிந்து செயற்பட்ட பொது ஜன பெரமுனவும், புதிதாக முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் அமைக்கப்பட்டுள்ள புதிய கூட்டணியும் ரணில், சஜீத்



தரப்பு போன்று வர்க்க நலம் சார்ந்து ஒன்றிணைய மாட்டார்கள் என்று அடித்துச் சொல்லவும் முடியாது.

இன்னொரு பக்கத்தில் தமிழ், முஸ்லிம் கட்சிகள் இணைந்து தேர்தலை எதிர்கொள்வது குறித்து கொழும்பில் முன்னாள் எம்.பி.க்கள் ஹக்கீம், சுமந்திரன், மனோகணேசன் ஆகியோர் சந்தித்து பேசியுள்ளதாக ஹக்கீம் பத்திரிகைகளுக்கு கூறியுள்ளார். ஆனால் அதை சுமந்திரன் மறுத்ததாகவும், தாங்கள் ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் பற்றியே பேசியதாகவும் யாழ். பத்திரிகை ஒன்று கேட்டபோது அவர் தெரிவித்துள்ளார். ஆனால் அந்த செய்தியை மனோகணேசன் மறுக்கவும் இல்லை, ஹக்கீம் தவறானது என்று சொல்லவும் இல்லை.

ஹக்கீமின் கூற்று உண்மையானால் பொதுவாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், சிறப்பாக கிழக்குமாகாணத்திலும் இந்த நிலைப்பாடு இன்றைய நிலையில் சுமந்திரனுக்கு எதிர்ப்பலைகளை ஏற்படுத்தக் கூடியது என்பதால் அவர் அதை அடக்கி வாசிக்க வாய்ப்புள்ளது. அப்படியான ஒரு நிலைப்பாடு தமிழர் வாக்குகளை முஸ்லிம்களுக்கு பெற்றுக் கொடுப்பதாக அமையும் என்று கிழக்கு தமிழர்கள் கருதுகிறார்கள்.

மறு பக்கத்தில் மனோகணேசனை பொறுத்த மட்டில் இது அவருக்கு தேவையான ஒன்று. ஏனெனில் கொழும்பு தேர்தல் மாவட்டத்தில் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் குறைக்கப்பட்டுள்ள நிலையில் வடக்கு கிழக்கு தமிழ்த்தரப்புடன் இணைந்து தேர்தலில் நிற்பது கொழும்பு வாழ் யாழ்ப்பாணத்தமிழர்களின் வாக்குகளை பெறுவதற்கு வசதியாக அமையும். கடந்த பாராளுமன்ற தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் இருந்து தேர்வு செய்யப்பட்ட எம்.பி.க்களில் பட்டியலில் இறுதியாக தப்பிப்பிழைத்தவர் மனோகணேசன்.

அதே போன்று வன்னியில் ரிஷார்ட் பதியூதீனினுக்கு எதிராக முஸ்லீம் காங்கிரஸ் தமிழர் வாக்குகளால் முன்னேற முடியும். யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்திலும் ஒரு எம்.பி. ஏழில் இருந்து ஆறாக குறைவதால் முஸ்லீம் காங்கிரஸ், தமிழரசு கூட்டு இருதரப்புக்கும் உதவியாக இருக்கும்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பொன்றில் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் செயலாளர் பிரசாந்தன் கிழக்கு அரசியலில் ஆர்வம் கொண்டுள்ள கட்சிகளும், அமைப்புக்களும் ஒன்றிணைய வேண்டும் என்ற கோரிக்கையையும் முன் வைத்துள்ளார். ரி.எம்.வி.பி. வருகின்ற பாராளுமன்ற தேர்தலில் கிழக்கின் மூன்று மாவட்டங்களிலும் போட்டியிடவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான அணியில் ரி.எம்.வி.பி.யுடன் இணைந்து ஒரே மேடையில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் சந்திரநேரு சந்திரகாந்தன், ஈ.பி.டி.பி. முன்னாள் எம்.பி. சங்கர் ஆகியோர் மேடையேறி இருப்பதும், மட்டக்களப்பில் வியாழேந்திரன் மேடையேறியிருப்பதும்,

திருகோணமலையில் தமிழரசு மீது தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தியையும் பயன்படுத்திக் கொள்ளும் முயற்சியும் இதற்கு கட்டியம் கூறுகின்றன. கிழக்கில் தமிழ்த்தேசிய கட்சிகளின் பலவீனங்களை பயன்படுத்தி தன்னை பலப்படுத்திக் கொண்ட கட்சியாக ரி.எம்.வி.பி.உள்ளது.

இதற்கிடையில் ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தின் போது கூறிய சில வாக்குறுதிகளுக்கு எண்ணங்களுக்கு செயல் வடிவம் கொடுக்க முடியாமல் பூகோள அரசியல் ஜனாதிபதி அநுரகுமாரவின் கைகளை கட்டிப்போட்டிருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ராஜபகசாக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டாம் என சீனாவும், அதேவேளை சீனாவுக்கும் அநுரகுமார ஆட்சிக்கும் இடையிலான உறவு தமக்கு பாதகமாக அமையும் என்று கருதுவதால் இந்தியாவும், அமெரிக்காவும் வளாதிருக்கவில்லை. ரணில்-சஜீத் அணிகளை பாராளுமன்ற தேர்தலில் கூட்டணியாக களம் இறக்க முயற்சிக்கின்றன.

இதற்கு இருக்கின்ற ஒரே கௌரவத் தடை ரணில் விக்கிரமசிங்க என்று அவை கருதுகின்றன. அதற்கான ஒரு கூட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஐ.நா. போன்ற சர்வதேச அமைப்பொன்றில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒரு பதவி வழங்கப்பட்டு கௌரவத் தடை நீக்கப்படவுள்ளதாக கொழும்பு வட்டாரங்களில் காஸ் சிலிண்டர் கசிவு ஏற்பட்டுள்ளது.

இக் கசிவு திட்டம் உண்மையானால்? ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் மாற்றத்திற்கான திசைகாட்டி, மாற்றத்திற்கான திசையை அன்றி மாற்று திசையையே காட்டும் அப்படி நடந்தால் ஜனாதிபதி தேர்தலுக்கு முந்திய சிறிலங்காதான் பாராளுமன்ற தேர்தலுக்கும் பிந்திய சிறிலங்கா

மாதம் இருமுறை அச்சுப் பத்திரிகையாக வெளியாகும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை
11 ஒக்டோபர் 2024 வெள்ளிக்கிழமை
அச்சுப் பத்திரிகையாக அனைத்து தமிழ் வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
வாரம் தோறும் eelanadu.ca என்ற மின்னிதழ் மூலம் பார்வையிடலாம்.
தொடர்புகளுக்கு 416 841 9600

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.
தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா
செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)
பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)
உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)
உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)
பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்
இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

28 செப்டம்பர் 2024 - 04 ஒக்டோபர்2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இரத்தினசிங்கம் மதியழகன்

புங்குடுதீவு 7ம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு இரத்தினசிங்கம் மதியழகன் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாள் 28 செப்டம்பர் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு இரத்தினசிங்கம் மதியழகன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## மஹாலய விரத உபயம்



### திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம்

மண்டைதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம் அவர்களதும் அவரது முன்னோர்களது நினைவாகவும் 02 ஒக்டோபர் 2024 புதன் கிழமை அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தம்பையா நடராஜா

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தம்பையா நடராஜா அவர்களின் 12வது ஆண்டு நினைவு நாள் 29 செப்டம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பத்மநாதன் கனகராஜா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பொன்னையா செல்லம்மா

இருபாலை கோப்பாயைச் சேர்ந்த திருமதி பொன்னையா செல்லம்மா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 28 செப்டம்பர் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். கள் அன்றைய தினம் திருமதி பொன்னையா செல்லம்மா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பத்மநாதன் கனகராஜா

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பத்மநாதன் கனகராஜா அவர்களின் பத்தாவது ஆண்டு நினைவு நாள் 05 ஒக்டோபர் 2024 சனிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு பத்மநாதன் கனகராஜா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 12வது, 24வது ஆண்டு நினைவஞ்சலி


### திரு செல்லர் மார்க்கண்டு
### திருமதி மனோன்மணி மார்க்கண்டு



யாழ்ப்பாணம் சித்தன்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களான திரு செல்லர் மார்க்கண்டு அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளையும் திருமதி மனோன்மணி மார்க்கண்டு அவர்களது 24வது ஆண்டு நினைவு நாளையொட்டியும் 27 செப் 2024 வெள்ளிக்கிழமை அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு செல்லர் மார்க்கண்டு, திருமதி மனோன்மணி மார்க்கண்டு இணையர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்


28 செப்டம்பர் 2024 சனிக்கிழமை இருபாலை கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பொன்னையா செல்லம்மா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.


28 செப்டம்பர் 2024 சனிக்கிழமை புங்குடுதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இரத்தினசிங்கம் மதியழகன் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



29 செப்டம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமை கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தம்பையா நடராஜா அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.


24 செப் 2024 செவ்வாய்க்கிழமை வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு சிவசுப்பிரமணியம் நாகலிங்கம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக திரு சிவசுப்பிரமணியம் நாகலிங்கம் அவர்கள் 29 செப்டம்பர் 2024 அன்று பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்


30 செப்டம்பர் 2024 திங்கட்கிழமை தமது முன்னோர்களை நினைவு கூர்ந்து மஹாலய விரத உபயமாக புதுச்செம்மணி வீதியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு திருமதி சந்திரா சிவலோஜினி குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.


26. சப்டம்பர் 2024 வியாழக்கிழமை கனடாவில் வாழம் திருமதி டிலக்சினி நிறஞ்சன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக திருமதி டிலக்சினி நிறஞ்சன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து 30 செப்டம்பர் 2024 திங்கட்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்


02 ஒக்டோபர் 2024 புதன்கிழமை மண்டைதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம் அவர்களையும் அவரது முன்னோர்களையும் நினைவு கூர்ந்து அன்னாரது குடும்பத்தினர் மஹாலய விரத உபயமாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.


02 ஒக்டோபர் 2024 புதன்கிழமை ஊரேழ கிழக்கைச் சேர்ந்த திருமதி சிவபாக்கியவதி நல்லையா அவர்களது 54வது ஆண்டு நினைவு நாளாகும். அன்னாரது நினைவாகவும் மஹாலய விரத உபயமாகவும் அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்


02 ஒக்டோபர் 2024 புதன்கிழமை கனடாவில் வாழம் திரு திருமதி மனோகாந்தன் சாருமதி இணையர்களின் செல்வப்புதல்வி சுபீக்கா மனோகாந்தன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி சுபீக்கா மனோகாந்தன் அவர்கள் தனது பெற்றோருடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்





குடும்பத்துடன் தீபாவளியை கொண்டாடி மகிழ
பிரம்மாண்டமான இசை நிகழ்ச்சி
கனடா, மற்றும் தென்இந்திய கலைஞர்களின் பங்களிப்பில்
AN EVENT BY
33 YEARS
CANADA TAMILOSAI
சுகமான
ராகங்கள்
VIBRANT HOSPITALITY GROUP
SATURDAY 26TH
OCTOBER 2024
AT 4:30 PM
VENUE:
CANADA EVENT CENTRE Whitby
Kalyan's Golden Rhythms
$30, $50, VIP, VVIP
FOR TICKETS:
+4166255010
eventbrite.ca
DANCE GROUP:
PRIMA DANCE SCHOOL EST. 2011
LIVE MUSIC

கலாபூஷணம் சோக்கல்லோ
சண்முகம்அரங்கு



கலைவேந்தன்
கணபதி ரவீந்திரன்





நவரசத்தாரகை
ரூபி யோகதாசன்

கனடிய தமிழ் கலைஞர்கள் சங்கம்
யுகம் வானொலி, யுகம் தொலைக்காட்சி இணைந்து
பெருமையுடன் வழங்கும்

# 20வது ஆண்டு நாடகப் பெருவிழா 2024

சிரிக்க ! சிந்திக்க!! சிந்தனைக்கு விருந்தளிக்க!!!
ஒரே மேடையில் ஐந்து நாடகங்கள்.
ரொரன்ரோ கானாவின் இன்னிசை மழை

SATURDAY OCT 19 @4:30PM

**Toronto Pavilion**
190 Railside Rd,
North York, ON M3A 1A3

நிகழ்ச்சி தொகுப்பாளர்
ராம் பிரசாந்



TICKETS: $20

Ravi 416-898 7284 / Ruby 416-670-6522

# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 - Tel : 416-321-6104



## ANNUAL GENERAL MEETING / ELECTION 2024

TO ALL ACTIVE MEMBERS OF SRI AYYAPPA SAMAJAM OF ONTARIO

The 29th Annual General Meeting (AGM) of Sri Ayyappa Samajam of Ontario will be held on Saturday October 19, 2024 from 10:00am to 1:00pm.
The venue for the meeting will be
635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8.
Election for 3 (Three) new Board of Directors for 2024 will be held on Saturday, October 26, 2024, between 10 Am to 2 PM at Canada Sri Ayyappan Temple, Hall 2.
Nomination kit can be collected from the office from October 1, 2024 and submit the completed kit latest by October 10, 2024 by 12.00 noon.
For further details, please contact the temple – 416-321-6104 / 416-321-7558 - *Board of Directors*

## வருடாந்த பொதுக்கூட்டம் / தேர்தல் 2024

அன்புடையீர்!


ஸ்ரீ ஐயப்ப சமாஜம் ஒப் ஒன்ராறியோவின் 29வது ஆண்டிற்கான வருடாந்த பொதுக்கூட்டம் 19-10-2024 சனிக்கிழமை காலை 10.00 முதல் பகல் 1:00 மணிவரை ஆலய கலாச்சார மண்டபத்தில் இடம்பெறும்.
2024ஆம் ஆண்டுக்கான மூன்று (3) நிர்வாக அங்கத்தவர்களுக்கான தெரிவு (தேர்தல்), 26-10-2024 சனிக்கிழமை காலை 10:00 மணி முதல், பகல் 2:00 மணிவரை ஐயப்பன் ஆலய கலாச்சார மண்டபம் - 2 இல் இடம்பெறும்.
முக்கிய குறிப்பு: விண்ணப்ப பத்திரம் ஒக்டோபர் 1, 2024 முதல் ஆலய காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்,
முடிவு தேதி அக்டோபர் 10, 2024 நண்பகல் 12:00 மணி.

மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் தொடர்புகொள்ளவும். *அறங்காவலர் சபையினர்* : 416.321.6104, 416.321.7558




# வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

## NEW LIFE FRESH START



Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

**Suren Sornalingam** BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience
in the field of Insolvency

Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca





# அனுர செய்யக் கூடிய மாற்றம்?

இரண்டு தடவைகள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு நசுக்கப்பட்ட ஒரமைப்பு. இரண்டு தடவைகள் தடை செய்யப்பட்ட ஒரமைப்பு. அதன் தலைவர் கைது செய்யப்பட்டு விசாரணைகள் இன்றி என்கவுண்டரில் கொல்லப்பட்டவர். அப்படிப்பட்ட ஒரமைப்பின் தலைவர் இப்பொழுது நாட்டின் அரசுத் தலைவராக வந்திருக்கிறார்.

ஆயுதப் போராட்டத்தில் தொடங்கி அரசுத் தலைவர் பதவி வரையிலுமான இந்த வளர்ச்சியை ஏற்கனவே ஓர் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களாகிய தமிழ் மக்கள் ஆர்வத்தோடு பார்க்க வேண்டும்.அதன் பொருள் அனுரவின் மாற்றம் என்ற கோஷத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதோ, அல்லது இனப்பிரச்சினைக்கான அவருடைய தீர்வை நம்ப வேண்டும் என்பதோ அல்ல.

ஆயுதப் போராட்டத்தில் தொடங்கி அரசுத் தலைவர் வரையிலுமான ஜேவிபியின் வெற்றிக்குள் இருந்து தமிழ் மக்கள் கற்றுக் கொள்ள பல விடயங்கள் உண்டு.

குறிப்பாக தேசிய மக்கள் சக்தி என்று அழைக்கப்படுகின்ற புதிய கூட்டை தமிழ் மக்கள் விருப்பு வெறுப்பு இன்றிக் கற்க வேண்டும். அரசியல் செயற்பாட்டாளர்களும் புத்திஜீவிகளும் இணைந்து உருவாக்கிய ஒரு கட்டமைப்பு அது.

ஆயுதப் போராட்ட மரபில் வந்த ஓர் அமைப்பும் புத்திஜீவிகளும் இணைந்து அப்படி ஒரு கட்டமைப்பை உருவாக்கியிருக்கிறார்கள். அக்கூட்டின் மையக் கட்டமைப்புக்குள் 73 உறுப்பினர்கள் உண்டு. அதில் அறுவர் மட்டுமே தமிழர்கள். அங்கு இன விகிதாசாரம் பேணப்படவில்லை.

ஆனால் யாழ்ப்பாணத்தில் ஜேவிபியை ஆதரிக்கும் சில படித்தவர்கள் இம்முறை தேர்தலில் இனவாதம் பின்வாங்கி விட்டது என்று புளகாங்கிதம் அடைகிறார்கள். தமிழ் பொது வேட்பாளர் இனவாதத்தை முன் வைத்ததாகவும் விமர்சிக்கின்றார்கள்.

ஆனால் அரகலிய போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு தமிழ்ச் செயற்பாட்டாளர் முகநூலில் எழுதியது போல, தேர்தல் பிரச்சாரங்களில் இனவாதம் பெரிய அளவில் கதைக்கப்படவில்லை என்பதை வைத்து இனவாதம் இல்லை என்ற முடிவுக்கு வரக்கூடாது.

அனுர கூறும் மாற்றம் எனப்படுவது இனவாதம் இல்லாத ஓர் இலங்கை தீவா?

இது தேர்தல் காலம் மட்டுமல்ல, ஐநா மனித உரிமைகள் சபையின் பொறுப்புக் கூறலுக்கான விவாதங்கள் நடக்கும் ஒரு காலகட்டமும் ஆகும். வரும் ஏழாம் திகதி வரையிலும் ஐநா மனித உரிமைகள் கூட்டத் தொடர் நடைபெறும். இதில் பொறுப்புக் கூறல் தொடர்பில் அனுரவின் நிலைப்பாடு என்ன?

அசோசியேட்டட் பிரஸ் என்ற ஊடகத்துக்கு அவர் வழங்கிய செவ்வியை இங்கு பார்க்கலாம் பொறுப்புக் கூறல் தொடர்பான கேள்வியைப் பொறுத்தவரை அது பழிவாங்குகலுக்கான ஒரு வழியாக அமையக்கூடாது. யாரை யாவது குற்றம் சாட்டுவதாகவும் அமையக்கூடாது. மாறாக உண்மையைக் கண்டு பிடிப்பதாக மட்டும் அமைய வேண்டும்.....பாதிக்கப்பட்ட மக்கள் கூட யாராவது தண்டிக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. அவர்கள் என்ன நடந்தது என்பதனை அறிவதற்கு மட்டும்தான் விரும்புகிறார்கள் என்று அனுர கூறுகிறார்.

அதாவது அவர் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்குத் தயாரில்லை. குற்றங்களை விசாரிப்பது உண்மையைக் கண்டு பிடிப்பதற்கு என்று கூறுகிறார். ஆயின் யார் குற்றவாளி என்ற உண்மையை கண்டு பிடித்த பின் அவரை தண்டிக்காமல் விட வேண்டும் என்று அவர் கூற வருகிறாரா?

பாதிக்கப்பட்ட மக்களும் அதைத்தான் விரும்புகிறார்கள் என்று அவருக்கு யார் சொன்னது? அதாவது அனுர பொறுப்புக் கூறுவதற்குத் தயார் இல்லை. குற்றவாளிகளைப் பாதுகாப்பது என்பதே இனவாதம் தான்.

நாட்டின் இனவாதச் சூழலை அனுர மாற்றுவார் என்று தமிழ் மக்களை நம்ப வைப்பதாக இருந்தால் அவர், கடந்த காலங்களில் அவருடைய கட்சி குறிப்பாக அவர் தமிழ் மக்களுக்கு எதிராக எடுத்த இரண்டு பிரதான நிலைப்பாடுகளுக்கு பொறுப்புக் கூறுவாரா? மன்னிப்புக் கேட்பாரா?

தமிழ் மக்களின் தாயகத்தை அதாவது வடக்கையும் கிழக்கையும் சட்ட ரீதியாகப் பிரித்தது ஜேவிபி இன். இது முதலாவது.

இரண்டாவது, சுனாமிக்குப் பின்னரான சுனாமிப் பொதுக் கட்டமைப்பை எதிர்த்து அனுர தனது அமைச்சுப் பதவியைத் துறந்தார்.சுனாமிப் பொதுக்கட்டமைப்பு எனப்படுவது மனிதாபிமான நோக்கங்களுக்கானது. இயற்கைப் பேரழிவு ஒன்றுக்குப் பின் உருவாக்கப்பட இருந்த மனிதாபிமானக் கட்டமைப்பு அது. அதைக் கூட எதிர்த்த ஒருவர் இப்பொழுது அதற்கு பொறுப்பு கூறுவாரா? தமிழ் மக்களிடம் மன்னிப்பு கேட்பாரா? அவரிடம் இனவாதம் இல்லை என்று கூறி அவருக்கு வாக்களிக்குமாறு மறைமுகமாகக் கேட்ட யாழ்ப்பாணத்தில் உள்ள படித்தவர்கள் இதற்குப் பதில் கூறுவார்களா?

அதுமட்டுமல்ல தமிழ் பொது வேட்பாளரோடு அனுர பேச முற்படவில்லை. ரணில் விக்ரமசிங்கவும் சஜித் பிரேமதாசவும் தமிழ் பொது வேட்பாளரோடு உரையாடத் தயாராக இருந்தார்கள். ஆனால் அனுர உரையாடத் தயாராக இருக்கவில்லை.

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்திடம் ஜேவிபி அது தொடர்பான கோரிக்கைகளை முன் வைத்ததாகத் தெரிகிறது. எனினும் தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்திய தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பிடம் அவர் உத்தியோகபூர்வமான கோரிக்கைகள் எவற்றையும் முன் வைத்திருக்கவில்லை. தமிழ்ப் பொது வேட்பாளரை அவர் பொருட்படுத்தவில்லை. அதாவது தமிழ் வாக்குகளை அவர் பொருட்படுத்தவில்லை?

அவர் பதவியேற்ற போது தேசிய கீதம் இசைக்கப்படுகையில் ஒரு பகுதி பிக்குகள் எழுந்து நின்றமையை சில தமிழர்கள் பெரிய மாற்றமாகச் சித்திருக்கிறார்கள். ஆனால் பதவியேற்ற போது பௌத்தப்பிக்குகளின் முன் அவர் மண்டியிட்டு அமர்ந்து ஆசீர்வாதம் பெறுவதை அவர்கள் பார்க்கவில்லையா?

அவர் இடதுசாரி மரபில் வந்த ஒரு தலைவர் என்று கூறப்படுகிறது. ஆனால் அவரால் சிங்கள பௌத்த அரசு கட்டமைப்பின் வழமைகளை மீறிச் செயல்பட முடியவில்லை என்பதைத் தான் அந்த ஆசீர்வாதம் பெறும் நிகழ்ச்சி நமக்கு உணர்த்தியது. அந்த மத ரீதியான சிஸ்டத்தை அவரால் மாற்ற முடியவில்லை. அவரும் அந்த சிஸ்டத்தின் கைதி தான்.

அதனால் தான் தமிழ் மக்கள் அவர் கூறும் மாற்றத்தை அதாவது சிஸ்டத்தில் மாற்றம் என்பதனை சந்தேகத்தோடு பார்க்கின்றார்கள். ஏனெனில், தமிழ் மக்கள் கேட்பது மேலோட்டமான சிஸ்டத்தில் மாற்றத்தை அல்ல. தமிழ் மக்கள் கேட்பது அதைவிட ஆழமான கட்டமைப்பு மாற்றத்தை. ஒற்றையாட்சி அரசுக் கட்டமைப்பில் மாற்றம். அதைச் செய்ய அனுராவால் முடியுமா?


கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -




பதவியேற்ற பின் அவர் ஆற்றிய உரையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் பின்வருமாறு கூறுகிறார்.. சிங்களவராக இருந்தாலும், தமிழராக இருந்தாலும், முஸ்லிமாக இருந்தாலும், பேர்கராக இருந்தாலும், மலேயராக இருந்தாலும், இவர்கள் அனைவருக்கும் நாம் இலங்கைப் பிரஜைகள் என்று பெருமையுடன் வாழக்கூடிய நடைமுறைச்சாத்தியமான ஒரு நாடு உருவாகும் வரை, இந்த நாடு தோல்வியடையுமே தவிர வெற்றியடையாது.

அதற்காக அரசியலமைப்பு ரீதியான, பொருளாதார,அரசியல் மறுசீரமைப்புகளை மேற்கொள்ள ஒரு போதும் நாம் பின்வாங்க மாட்டோம். தனது இனம், தனது மதம், தனது வர்க்கம், தனது சாதி என இந்த நாடு பிரிந்திருந்த காலத்தை முழுமையாக முடிவுக்குக் கொண்டு வந்து, பன்முகத்தன்மையை மதிக்கும் இலங்கை தேசமாக இந் நாட்டைக் கட்டியெழுப்பும் நிலையான, நிரந்தரமான வேலைத்திட்டத்தை நாம் ஆரம்பிப்போம்.

இது அரசியல் அடர்த்தி குறைந்த வார்த்தைகளால் வழங்கப்படும் கவர்ச்சியான ஆனால் மேலோட்டமான வாக்குறுதி. இப்படிப்பட்ட லிபரல் வாக்குறுதிகள் பலவற்றை தமிழ் மக்கள் ஏற்கனவே கடந்து வந்து விட்டார்கள். தமிழ் மக்கள் கேட்பது அடிப்படையான கட்டமைப்பு மாற்றத்தை. இலங்கைத் தீவின் பல்லினத் தன்மையை உறுதிப்படுத்தும் கடடமைப்பு மாற்றத்தை. இலங்கைத் தீவில் ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள், தேசங்கள் உண்டு என்பதனை ஏற்றுக்கொள்ளும் மாற்றத்தை. அந்த அடிப்படையில் வழங்கப்படும் ஒரு தீர்வை. தமிழ் மக்களை இறைமையும் சுயநிர்ணய உரிமையும் கொண்ட ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கும் ஒரு தீர்வை. அப்படிப்பட்ட ஒரு மாற்றத்தை ஏற்படுத்த அனுரவால் முடியுமா?



# தோல்வியடைந்ததா இந்தியா?

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



ஜனாதிபதி தேர்தல் முடிவு தொடர்பாக செய்தி வெளியிட்ட அத்தனை சர்வதேச ஊடகங்களும் இரண்டு விடயங்களை முக்கியமாக குறிப்பிட்டிருந்தன. ஒன்று இலங்கையில் முதல்முறையாக மார்க்சிஸ்ட் வேட்பாளர் வெற்றி பெற்றிருக்கின்றார் என்பது

இரண்டு. இந்த வெற்றி இந்தியாவுக்குச் சவாலானது என்பது அநுர குமார திசாநாயக்க இலங்கையின் ஜனாதிபதியாக வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படுவதற்கு முன்னரே, இலங்கையின் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா அவரை சந்தித்து வாழ்த்து கூறியிருந்தார். அது போலவே, கொழும்பில் உள்ள சீன தூதுவர் கீ சென்ஹோங்கும் அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்து வாழ்த்து கூறினார்.

இது பிராந்திய அரசியலில் இந்த இரண்டு நாடுகளும் எந்தளவுக்கு போட்டித் தன்மையுடன் இயங்குகின்றன என்பதை மாத்திரமன்றி, இலங்கையின் மீதான இந்த நாடுகளின் அக்கறையையும் வெளிப்படுத்தியது. இந்த தேர்தலுக்கு முன்னரே, கூடுதல் ஆதரவு இருக்கிறது. ஆதரவு பெருகி வருகிறது என்பது போன்ற புலனாய்வு தகவல்கள், கருத்துக் கணிப்புகள் வெளியான போது அதனை பலர் குறை மதிப்புக்கு உட்படுத்தியிருந்தனர்.

அநுரகுமார திசாநாயக்கவுக்கு ஆதரவு அதிகரித்திருப்பது குறித்தும் அவர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு அதிகம் இருப்பதையும் முதலில் கண்டு கொண்டது இந்தியப் புலனாய்வு அமைப்பு தான். அது வழங்கிய தகவலுக்கு அமையவே, அனுரகுமார திசநாயக்க புதுடில்லிக்கு அழைக்கப்பட்டிருந்தார். அவருக்கு அங்கு இந்தியாவின் நலன்கள், எதிர்பார்ப்புகள், பிராந்திய பாதுகாப்பு கரிசனைகள் போன்ற விடயங்கள் குறித்து மிகத் தெளிவாக சவுத் புளொக் அதிகாரிகள், இராஜதந்திரிகளால் எடுத்துக் கூறப்பட்டிருந்தது.

இந்தத் தேர்தலில் அநுரகுமார திசாநாயக்கவுக்குச் சாதகமான அலை வீசுவதை இந்திய புலனாய்வு அமைப்பு அறிந்திருந்த போதும், அது ஏன் இந்த அலையை மடை மாற்றம் செய்வதற்கு முயற்சிக்கவில்லை என்ற கேள்வி இருக்கிறது.

அநுரகுமாரவின் வெற்றி இந்தியாவுக்கு ஏற்கனவே தெரிந்தது என்றால் அவரது வெற்றி இந்தியாவுக்கு சாதகமானதல்ல என்றால் ஏன் இந்தியா இதனை தடுப்பதற்கான முயற்சிகளில் இறங்கவில்லை? அல்லது தடுக்கும் முயற்சியில் இறங்கி தோல்வி கண்டிருக்கிறதா? அநுரகுமார வெற்றி பெற்றவுடன் சில இராஜதந்திரிகள் இது இந்தியாவுக்கு முக்கியமான பின்னடைவு அல்லது தோல்வி என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

அதற்குக் காரணம் இருக்கிறது. அநுரகுமார திசாநாயக்க அடிப்படையில் ஒரு இந்திய ஆதரவாளர் அல்ல. அவரது கட்சி கடந்த காலங்களில் இந்திய எதிர்ப்பு வாதத்தை பயன்படுத்தி வன்முறைகளிலும் ஈடுபட்டது அரசியலிலும் ஈடுபட்டது.

அதனை மூலதனமாகக் கொண்டு, கடந்த காலங்களில் சிங்கள மக்கள் மத்தியில் தன்னைப் பிரபலப்படுத்தியும் கொண்டது. அப்படிப்பட்ட ஒரு கட்சியின் தலைவரான அநுரகுமார, இந்திய சார்புத்தன்மை கொண்ட ஒரு ஆட்சியை நிறுவுவார் என இந்தியாவினால் ஒரு போதும் எதிர்பார்க்க முடியாது.

இப்படிப்பட்ட ஒருவர் ஆட்சிக்கு வந்திருப்பது இந்தியாவுக்கு ஒரு பின்னடைவு. தான் ஆட்சிக்கு வந்தால், இந்தியாவின் 'அதானி' குழுமத்தினால் மன்னாரில் காற்றாலை மின் திட்டங்



களை அமைப்பதற்கு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை கிழித்தெறிவேன் என்று அநுரகுமார கூறியிருந்தார் இந்தியாவின் திட்டங்களுக்கு எதிரான அவரது கருத்துக்கள் புதுடில்லியினால் இரசிக்க கூடியவை அல்ல, இவ்வாறான நிலையில் அவர் ஆட்சிக்கு வந்திருப்பது இந்தியாவுக்கு சாதகமானது என்று கூற முடியாது.

அநுரகுமார திசாநாயக்கவும் அவரது தேசிய மக்கள் சக்தியும் சீனாவுடன் நெருக்கமான உறவுகளை கொண்டிருப்பவை. அந்த அடிப்படையில் அவர் ஆட்சிக்கு வருவது இலங்கையில் சீனாவின் செல்வாக்கு அதிகரிப்பதற்கு வழி வகுக்கும். இது பிராந்திய அரசியல், பாதுகாப்பு சூழமைவுகளில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால், இதுவும் இந்தியாவுக்கு ஒரு பின்னடைவான நிலை தான்,

இப்படி அநுரகுமாரவின் வெற்றி இந்தியாவுக்கு பல்வேறு காரணங்களால் ஒரு தலைவலியாக அல்லது பிரச்சினையாக அல்லது கரிசனைக்குரிய ஒன்றாக மாறி இருக்கிறது. தமக்கு சார்பில்லாத ஒருவர் இலங்கையில் ஆட்சிக்கு வருவதை இந்தியா ஒரு போதும் விரும்பாது.

ஏனென்றால் நீண்டகால நோக்கிலும் பிராந்திய அரசியல் மற்றும் பாதுகாப்பு நோக்கிலும் அது தனக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பது இந்தியாவுக்கு நன்றாகத் தெரியும். அப்படித் தெரிந்திருந்தும் இந்தியா இந்த ஆட்சி மாற்றத்தை தடுக்க கூடிய வகையில் பங்களித்திருக்கவில்லை. அல்லது அவ்வாறான முயற்சியில் தோல்வி கண்டிருக்கிறது.

இப்படி ஒரு மாற்றம் இலங்கை மக்கள் மத்தியில் உருவாகி வருகின்ற போது இந்தியா என்ன செய்தது? 2015 ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து மைத்திரிபால களமிறக்கப்பட்டிருந்தார். அதனை இந்தியாவே தனது புலனாய்வு அமைப்புகள் மற்றும் முகவர்களின் ஊடாக நிறைவேற்றியதாக, எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைத்துக் கொடுத்ததாக தகவல்கள் வெளியாகின.

அதனால் தான் தன்னை இந்திய புலனாய்வு அமைப்பு தோற்கடித்து விட்டதாக மஹிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியிருந்தார்.

தேர்தல் என்பது ஒரு கணிதம். மக்களின் விருப்பு வெறுப்புகளையும் கட்சிகளுக்கு இருக்கின்ற வாக்குகளையும் சரியாக கணக்கிட்டு காய்களை நகர்த்தினால் அந்த கணிதப் பரீட்சையில் வெற்றி பெற முடியும். அப்படித்தான் 2015 ஜனாதிபதி தேர்தலில் இந்தியா தானும் வெற்றி பெற்றது. மைத்திரியையும் வெற்றிபெற வைத்தது. மஹிந்தவையும் தோற்கடித்தது.

அப்படிப்பட்ட இந்தியா ஏன் 2019 ,இல் கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்கு வர அனுமதித்தது? அதே வழியில் இப்போது அநுரகுமார திசாநாயக்க ஆட்சிக்கு வருவதைத் தடுக்காமல் இருந்தது? இந்தக் கேள்வி மிக முக்கியமானது. இந்தியா இந்த, இரண்டு சந்தர்ப்பங்களிலும் ஒன்றில் தோல்வியை தழுவியிருக்க வேண்டும். அல்லது வரப் போகும் சூழலை எதிர்கொள்வதற்கு தன்னை தயார்படுத்தி இருக்க வேண்டும்.

அநுரகுமார திசாநாயக்க வெற்றி பெற்றதும் சில அரசியலாளர்கள் இந்தியா தோல்வி அடைந்து விட்டது என்ற கருத்தை முன் வைத்திருந்தது, முதல் காரணத்தின் அடிப்படையில் தான். ஆனால், இந்த ஜனாதிபதி தேர்தலில் வியூகங்களை வகுப்பதில் இந்தியா தோல்வியை தழுவியதா? என்றால், அது உறுதியான விடயம் அல்ல என்பதே சரியான பதில்

இந்தியா வியூகங்களை வகுத்துக் கொடுத்தால் அல்லது வகுத்துக் கொள்ள உதவினால், அது ஒரு அப்பட்டமான தலையீடாக இருக்கும். இந்தியாவோ அல்லது வேறு நாடோ, நேரடியாக இதனை செய்வதில்லை. மறைமுகமாக அதற்கான சூழ் நிலைகளைத் தான் உருவாக்குவது வழமை. அநுரகுமாரவின் வெற்றியை இந்தியா சரியாக கணிப்பிட்டிருந்தால் நிச்சயமாக அதற்கு எதிரான ஒரு வியூகத்தை வகுத்துக் கொடுத்திருக்க முடியும்

இதற்காக இந்தியா சில நகர்வுகளை முன்னெடுத்திருக்க முடியும். ரணில் விக்கிரமசிங்கவையும் சஜித் பிரேமதாசவையும் ஒன்றிணைத்திருக்கும். தமிழ் பொது வேட்பாளரை போட்டியிடுவதில் இருந்து விலகி கொள்ளச் செய்திருக்கும். இந்த ,இரண்டு விடயங்களிலும் இந்தியா சரியாக செயலாற்றவில்லை. அல்லது செயலாற்ற முடியவில்லை. இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா அடுத்தடுத்து பல்வேறு தரப்பினரை சந்தித்து ஒரு சாதகமான சூழலை உருவாக்க முயற்சித்தார்.

அதேபோல கடைசி நேரத்தில் கூட இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் கொழும்பு வந்து ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் ஒரு உடன்பாட்டை ஏற்படுத்த முயற்சித்தார் என்ற தகவலும் உள்ளது. ஆனால் சஜித் பிரேமதாச கடைசி வரையில் அதற்கு இணங்கவில்லை என்று கூறப்படும் தகவல் உண்மையானால், அது இந்தியாவின் ஒரு தோல்வி.

அதேபோன்று தமிழ் பொது வேட்பாளர் தொடர்பாக இந்தியா கடுமையான அழுத்தங்களை பிரயோகிக்க முடியாத நிலையிலும் இருந்தது. நாசூக்காக, சஜித் பிரேமதாசவை ஆதரிக்க வேண்டும் என தமிழ் அரசு கட்சியின் ஊடாக அழுத்தம் கொடுத்தது.

இந்த தேர்தலில், சஜித் பிரேமதாசவையே இந்திய விரும்பியது. ரணில் விக்ரமசிங்க வந்தாலும் பரவாயில்லை என்று கருதியது. அநுரகுமார வந்தால் சிக்கல் என்றும், உணர்ந்திருந்தது. அப்படி இருந்தபோதும் அனுரகுமாரவுக்கு எதிராக தனக்கு ஆதரவான சக்திகளை ஒன்றிணைத்து பலப்படுத்துவதில் இந்தியா தீர்க்கமான பங்கை வகித்திருந்தால் அதன் இராஜதந்திர பின்னடைவு தவிர்க்கப்பட்டிருக்கும்.

அதற்காக இந்தியா இப்போதைய சூழ்நிலையை தனக்கு முற்றிலும் மாறானது என்று கருதவில்லை. ஏற்கனவே அனுரகுமார திசநாயக்கவை இந்தியா கையாளத் தொடங்கிவிட்டது. அவரை முன்கூட்டியே புதுடில்லிக்கு அழைத்தது, டோவல் கொழும்பில் வந்து பேசியது, பதவியேற்க முன் அவருக்கு வாழ்த்து தெரிவித்தது. எல்லாமே அதனை உறுதிப்படுத்தும் விடயங்கள் தான். பிரதமராக பதவி ஏற்பதற்கு முன்னதாக ஹரிணி அமரசூரியவையும் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா – தனியாக சந்தித்து பிராந்திய சூழல் குறித்து அவருக்கு விளக்கம் கொடுத்திருந்தார்.

அந்தளவுக்கு இந்தியா அநுரகுமாரவை கையாளுகிறது. இது இந்தியாவுக்கு இப்போதைக்கு ஓரளவுக்கு வசதியான நிலையாகும். இந்த நிலை நீடிப்பதையே இந்தியா விரும்புகிறது விரும்பும். அமெரிக்காவில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கூறியுள்ள ஒரு கருத்து, இதன் ஆழத்தை புரிய வைக்கிறது. இலங்கையில் அரசியல் ரீதியாக என்ன நடைபெறுகின்றது என்பதை அந்த நாட்டின் அரசியலே தீர்மானிக்க வேண்டும்.

அண்டை நாடுகளின் அரசியல் பரப்பை கட்டுப்படுத்துவதற்கு ,ந்தியா முயலவில்லை. எங்களின் ஒவ்வொரு அயல்நாட்டிற்கும் அவர்களின் சொந்த ,யங்கு வழிமுறை உள்ளது. எந்த ,யக்கவியல் சரியானது என நாங்கள் கருதுகிறோமோ அதனை அவர்கள் பின்பற்ற வேண்டும் என நாங்கள் பரிந்துரைப்பது நோக்கமல்ல' என்று ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இதன்படி பார்த்தால் இந்தியா இப்போதைக்கு அநுரகுமார விடயத்தில் அதிகம் கொள்ளவில்லை தெரிகிறது தோல்வியடைந்து விட என்ற கருத்து சரி அப்படியானால், அநுரகுமார விடயத்தில் இந்தியா விட்டது என்ற கருத்து சரியானதா? அல்லது சரிப்படுத்திக் கொள்ள முனைகிறது என்பது சரியானதா?

# அநுர குமாரவை வெல்ல வைத்தது யார்?

ஜனாதிபதி தேர்தலில் அநுரகுமார திசாநாயக்கவின் வெற்றி ஓரளவுக்கு முன்கூட்டியே எதிர் பார்க்கப்பட்ட போதும், அது ஒரு திகைப்பை உருவாக்கி இருக்கிறது. இந்தத் தேர்தலில் அவருக்கு கிடைத்திருக்கும் 42.31 சதவீத வாக்குகள் என்பது பலரால் எதிர்பாராத ஒன்று.

கருத்துக்கணிப்புகள் பல, அநுரகுமார முன்னிலையில் இருப்பதாக கூறி வந்த போதும் இப்படி ஒரு மாற்றத்தை நிகழ்த்தும் அளவுக்கு இருக்குமா என்ற சந்தேகம் காணப்பட்டது. ஏனென்றால். கடந்த 2019 ஜனாதிபதி தேர்தலில் அநுரகுமாரவுக்கு வெறுமனே மூன்று சதவீத வாக்குகள் தான் கிடைத்தன. அப்படியிருக்கையில், அது எப்படி 50 சதவீதத்தை தாண்ட முடியும் என்ற நியாயமான கேள்வி எல்லோரிடமும் காணப்பட்டது. ஜனாதிபதி தேர்தல் ஒன்றில் வெற்றி பெறுவதற்கு, செல்லுபடியான மொத்த வாக்குகளில் 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இதுதான் அடிப்படை நிபந்தனை.

அதனால் தான். அநுரகுமார ஒரேடியாக 47 சதவீதம் மேலதிக வாக்குகளை பெற்று வெற்றி பெறுவார் என்ற நம்பிக்கை பெரும்பாலான அரசியலாளர்களிடம் இருக்கவில்லை. அப்படியான மாற்றம் நிகழ்வது என்பது மாயாஜால வித்தையாகத் தான் இருக்கும். அதனால் தான் அவரது வெற்றியின் மீது தொடர்ச்சியாக கேள்வி எழுப்பப்பட்டு வந்தது. ஆனாலும் அவர் வெற்றி பெற்றிருக்கிறார்.

எனினும், ஜனாதிபதி தேர்தல் ஒன்றில் வேட்பாளர் ஒருவர் வெற்றி பெறுவதற்கான முதலாவது அடிப்படை நிபந்தனையான 50 சதவீத வாக்குகளை பெற்றுக் கொள்ளாமல் தான், அவர் இந்த வெற்றியை பெற்றிருக்கிறார். இரண்டாவது சுற்றில், விருப்பு வாக்கு எண்ணிக்கையின் மூலம் அவருக்கு இந்த வெற்றி கிடைத்திருக்கிறது.

எந்த ஒரு வேட்பாளருக்கும் 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் கிடைக்காத போது, இரண்டாவது சுற்று வாக்கு எண்ணிக்கை மேற்கொள்ளப்படும். அந்த சமயத்தில் முதலாவது அடிப்படை நிபந்தனையான 50 சதவீதம் என்ற விடயம் செல்லுபடியற்றதாகி விடும். அது விதிமுறை செல்லுபடியற்றதானதால் தான், விருப்பு வாக்குகளுடன் சேர்த்து கூட, 50 சதவீத வாக்குகளை பெறாமலேயே அநுர குமார திசாநாயக்கவினால் வெற்றியாளராக முடிந்திருக்கிறது. இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் வரலாற்றில், 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட வாக்குகளுடன் மக்கள் ஆணை பெற்றவர்கள் தான், இதுவரை நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளாக இருந்திருக்கிறார்கள்.

ஜே.வி.பி.யின் சுனில் ஹந்துநெத்தி கூறுவது போல, அநுரகுமார தான் கடைசி நிறைவேற்று அதிகார ஜனாதி பதியாக இருப்ரேயானால் இலங்கை வரலாற்றில், மிகக் குறைந்த மக்கள் ஆணை பெற்ற ஜனாதிபதி என்ற சாதனையையும் அவரே கொண்டிருப்பார். அநுர குமார திசாநாயக்கவின் இந்த வெற்றி எப்படி தீர்மானிக்கப் பட்டது என்ற கேள்வி முக்கியமானது

ஏனென்றால் இந்த வெற்றியை அநுர குமாரவின் கொள்கைகள் மாத்திரம் தீர்மானிக்கவில்லை. அவரது கட்சியின் மீதான அல்லது அவர் மீதான நம்பிக்கை தீர்மானிக்கவில்லை. அவர் முன் வைத்த தேர்தல் அறிக்கையின் மீதான ஈர்ப்பும் இந்த வெற்றியைத் தீர்மானிக்கவில்லை. ராஜபக்ஷவினர் மீதான வெறுப்பு தீர்மானித்திருக்கிறது. சஜித் பிரேமதாசவின் பலவீனம் இதனை தீர்மானித்திருக்கிறது. ரணில் விக்கிரமசிங்கவின் பிடிவாதம் மற்றும் சஜித் பிரேமதாசவை வீழ்த்தும் குரோதம் இதனை தீர்மானித்திருக்கிறது. தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தமும் இதனை தீர்மானித்தி ருக்கிறது. இவற்றுக்கு அப்பால் அரசியல் முறைமைகள், தேர்தல் முறைமைகள் மீது வெறுப்படைந்தி ருக்கின்ற மக்களும் இந்த வெற்றியை தீர்மானித்திருக்கிறார்கள், அதாவது அவருக்கு வாக்களித்த மக்களை விட, அவருக்கு வாக்களிக்காத மக்கள் தான், இந்த



வெற்றியின் மீது தாக்கம் செலுத்தியிருக்கிறார்கள். 50 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளுடன் தெரிவு செய்யப்படுகின்ற ஒரு ஜனாதிபதியை, அவரது ஆதரவாளர்கள், அவரது கொள்கையின் மீது. அவரின் மீது நம்பிக்கை கொண்டவர்கள் தெரிவு செய்திருப்பார்கள். ஆனால் 50 சதவீதத்திற்கும் குறைவான ஆணை யுடன் ஆட்சிக்கு வருகின்ற ஒருவரை அவருக்கு வாக்களித்தவர்களை விட வாக்களிக்காதவர்கள் தான், தீர்மானிப்பவர்களாக இருந்திருப்பார்கள். பாரம்பரிய அரசியலின் தோல்வி, அதன் மீது இருந்த நம்பிக்கை ராஜபக்ஷவினரால் சிதைக்கப்பட்ட நிலையில், புதியதொரு மாற்றத்தின் மீது நம்பிக்கை வைக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள் வாக்காளர்கள்.

கோட்டாபய ராஜபக்ஷ ஏற்படுத்திய வீழ்ச்சி, அவர்கள் மீது உருவாகிய வெறுப்பு என்பன அநுரகுமாரவுக்கு ஆதரவான வாக்குகளாக மாறி இருக்கின்றன.

சஜித் பிரேமதாச தன்னை ஜனாதிபதி தேர்தலுக்கு தயார்படுத்தி வந்த போதும், சிறுபான்மையின மக்களை தாண்டி சிங்கள மக்களின் நம்பிக்கையை பெறத் தவறியிருக்கிறார். அவருக்கு சிங்கள வாக்குகள் கிடைத்திருக்கின்ற போதும், அது போதுமானதாக இல்லை அங்கு அவர் தனது வாக்குகளை அதிகரிக்க முயற்சிக்கவில்லை சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகள் மட்டுப்படுத்தப்பட்டவை. அவை அதிக பட்சமாக 2019 ஜனாதிபதி தேர்தலில் அவருக்குக் கிடைத்திருந்தன

அதனை இன்னும் அதிகரிக்க முடியும் என அவர் எதிர்பார்த்திருக்க முடியாது. வெற்றி பெறுவதற்கான அதிக வாக்குகளை பெற வேண்டுமானால், சிங்கள மக்களின் வாக்குகளை தான் பெற்றிருக்க வேண்டும். அதற்கான முயற்சியில், அதற்கான நகர்வுகளில் அதற்கான வேலைத் திட்டங்களில் அவர் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

இதன் மூலம் அவர் அநுரகுமாரவுக்கு வெற்றி வாய்ப்பை உருவாக்கி இருக்கிறார். ரணில் விக்கிரமசிங்க, தொடர்ந்து ஜனாதிபதியாக நீடிக்க வேண்டும் என எதிர்பார்த்தார். அதோடு சஜித் பிரேமதாச வெற்றி பெறக்கூடாது என்றும் எதிர்பார்த்தார். அதனால் அவர் கட்சிகளைப் பிரித்து ஆட்களை இழுத்து, குழப்பங்களை விளைவித்தார். அதன் விளைவாக வாக்குகள் பிரிந்தன எப்போதும் பச்சையாக ,ருந்த வாக்குகள், அதற்கு ஆதரவாக ,ருந்த வாக்குகள் எல்லாமே பச்சையாகவும் இளம்பச்சையாகவும் பிளவுபட்டது அதன் விளைவாக அநுரகுமார திசாநாயக்கவுக்கு சார்பான நிலை உருவானது.

2019 ஜனாதிபதி தேர்தலில், சஜித் பிரேமதாசவுக்கு வடக்கு, கிழக்கில் தமிழ் வாக்குகள் முழுமையாக கிடைத்திருந்தன. அந்த வாக்குகள் இந்த முறை பிளவுபட்டன. ரணில் விக்கிரம சிங்கவுக்கும், சஜித் பிரேமதாசவுக்கும் மாத்திரமின்றி, தமிழ் பொது வேட்பாளராலும் பிளவுப்படுத்தப்பட்டது. தமிழ் பொது வேட்பாளர் சுமார் இரண்டேகால் இலட்சம் வாக்குகளை அள்ளிக் கெண்டு போனார்.


அதனால் மாத்திரம், சஜித் பிரேமதாச தோல்வி காணவில்லை. அவருக்கும் அநுர குமாரவுக்கும் ,டையில் காணப்பட்ட வாக்குகளின் வித்தியாசம் மிகப் பெரியது - தமிழ் பொது வேட்பாளரில் வாக்குகளால் அந்த வித்தியாசத்தை ஈடுகட்ட முடியாது. 2005 ஜனாதிபதி தோதலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், மஹிந்த ராஜபக்ஷவுக்கும்' இடையில் காணப்பட்ட வித்தியாசம் 2 ,லட்சத்துக்கு உட்பட்டது தான். தமிழ் மக்களால் அந்த தேர்தல் புறக்கணிக்கப்பட்டதால், ரணில் விக்கிரமசிங்கவினால் வெற்றி பெற முடியாத நிலை ஏற்பட்டது. அது போன்ற ஒரு நிலை இந்தமுறை ஏற்படவில்லை. அதனால் பொது வேட்பாளரின் மீதோ, தமிழ் மக்களின் மீதோ, பொது வேட்பாளரை நிறுத்திய நோக்கத்தின் மீதோ, சஜித் பிரேமதாச குறை கூறமுடியாது.

ஏனென்றால், அதைவிட அவர் மேலதிகமாக 10 இலட்சம் வாக்கு களை பெற்றிருந்தால் தான், அநுர குமாரவின் வாக்குகளுடன் சமப்படுத்தியிருக்க முடியும். அதனை அவர் பெறத் தவறிவிட்டார். இதனால் அநுரகுமார திசாநாயக்கவினால், மிக இலகுவாக முதல் இடத்திற்கு வர முடிந்தது இவை மாத்திரம் அவரது வெற்றிக்குக் காரணம் அல்ல, மூன்று இலட்சம் வாக்குகள் செல்லுபடியற்றதாகின. 38 ,லட்சம் வாக்குகள் செலுத்தப்படவில்லை இவை இரண்டுமே கிட்டத்தட்ட 41 இலட்சத்தை எட்டி விட்டது. இந்த 41 இலட்சம் மக்களும் வாக்களித்திருந்தால், தீர்மானிக்கும் சக்தியாக இருந்திருப்பார்கள். இவர்களால், சஜித் பிரேமதாசவையோ, ரணில் விக்ரமசிங்கவையோ கூட வெற்றியாளராக மாற்றியிருக்க முடியும். இவர்கள் வாக்களிக்க தவறியதால், ஜனாதிபதி ஒருவர் பெற வேண்டிய ஆக குறைந்த வாக்குகளான 50 சதவீதத்தை விட, குறைந்த வாக்குகளை பெற்ற ஒருவர் ஜனாதிபதியாகின்ற நிலையை உருவாக்கியிருக்கிறது .

அப்படியானால் அநுரகுமாரவை ஜனாதிபதியாக்கியது யார்? நிச்சயமாக, அவரது ஆதரவாளர்கள் அல்ல. அவரைச் சுற்றியிருந்தவர்களும் அல்ல.



# Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 416 477 2259 | +1 647 700 7208
+1 647 709 1761 | +1 416 709 1536
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2

## மணமகள்

**ID08120762** F
43yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Teacher , Canada

**ID08120764** F
31yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Manager HR , Sri Lanka

**ID08120768** F
40yrs, 5'7" , Divorced , Not Specified , N/A Sevai , Bachelors.. , Accountant , Australia

**ID08120769** F
24yrs, 4'11" , Single , Karthigai , N/A Sevai , Diploma , Teacher , Sri Lanka

**ID08120770** F
32yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Senior software.. , Sri Lanka

**ID08120771** F
29yrs, 5'5" , Single , Aayilyam , 1 Sevai , Bachelors.. , Software engineer , Sri Lanka

**ID08120774** F
34yrs, 5'6" , Single , Rohini , 6 Sevai , Bachelors.. , Research Officer , Sri Lanka

**ID08120775** F
35yrs, 5'1" , Single , Uthirattathi , N/A Sevai , Bachelors.. , Marketing.. , United States

**ID08120776** F
29yrs, 5'6" , Single , Bharani , N/A Sevai , Bachelors.. , IT Proc Officer , Canada

**ID08120777** F
30yrs, 5'2" , Single , Swaathi , 9 Sevai , Diploma , Lab Tech , Canada

**ID08120778** F
26yrs, 5'4" , Single , Poorattathi , 12 Sevai , Bachelors.. , Nurse , Canada

**ID08120791** F
36yrs, 5'2" , Divorced , Thiruvonam , N/A Sevai , Masters Degree , Senior Finance.. , Sri Lanka

**ID08120792** F
33yrs, 5'2" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Mechanical.. , Germany

**ID08120794** F
24yrs, 5'4" , Single , Poosam , N/A Sevai , Bachelors.. , Dental Assistant , Canada

**ID08120795** F
31yrs, 5'4" , Single , Aayilyam , 9 Sevai , Bachelors.. , Human Resources.. , Canada

**ID08120799** F
45yrs, 5'3" , Divorced , Poosam , 5 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120800** F
38yrs, 5' , Divorced , Not Specified , N/A Sevai , Masters Degree , Chartered.. , India

**ID08120802** F
20yrs, 5'4" , Single , Chathayam/sadayam , 4 Sevai , Bachelors.. , MSc intended.. , Canada

**ID08120803** F
21yrs, 4'11" , Single , Revathi , N/A Sevai , High School , Beautician , Canada

**ID08120804** F
29yrs, 5'6" , Single , Aayilyam , 1 Sevai , Bachelors.. , HR Manager , Canada

**ID08120805** F
30yrs, 5' , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Development.. , Sri Lanka

**ID08120806** F
27yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Audit firm , Sri Lanka

**ID08120807** F
27yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Beautician.. , Sri Lanka

**ID08120808** F
31yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Masters Degree , Acadamic Staff , Sri Lanka

**ID08120809** F
32yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Accountant , United Kingdom

**ID08120822** F
22yrs, 5'3" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , RN , Canada

**ID08120830** F
28yrs, 5' , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Senior Consultant , United Kingdom

**ID08120804** F
29yrs, 5'6" , Single , Aayilyam , 1 Sevai , Bachelors.. , HR Manager , Canada

**ID08120799** F
5yrs, 5'3" , Divorced , Poosam , 5 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120795** F
31yrs, 5'4" , Single , Aayilyam , 9 Sevai , Bachelors.. , Human Resources.. , Canada

## மணமகன்

**ID08120761** M
34yrs, 5'8" , Awaiting Divorce , Not Specified , N/A Sevai , Masters Degree , Own jewelry.. , Sri Lanka

**ID08120763** M
34yrs, 5'9" , Single , Anusham , N/A Sevai , Bachelors.. , Business Administration , Sri Lanka

**ID08120765** M
51yrs, 5'6" , Divorced , Aayilyam , N/A Sevai , Postgraduate.. , Book keeping.. , Canada

**ID08120766** M
34yrs, 5'4" , Single , Pooraadam , 1 Sevai , High School , Business , Canada

**ID08120767** M
33yrs, 6' , Single , Not Specified , N/A Sevai , Diploma , CUSTOMER Service.. , Sri Lanka

**ID08120772** M
34yrs, 6'2" , Single , Not Specified , N/A Sevai , High School , Pharmach Own.. , Sri Lanka

**ID08120773** M
46yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Elecerician.. , Sri Lanka

**ID08120779** M
35yrs, 5'5" , Single , Aayilyam , N/A Sevai , High School , Company Forklift.. , Canada

**ID08120785** M
52yrs, 5'9" , Divorced , Not Specified , N/A Sevai , Bachelors.. , Optician , Sri Lanka

**ID08120787** M
33yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Medical rep , Sri Lanka

**ID08120788** M
22yrs, 5'4" , Single , Rohini , N/A Sevai , High School , Phone shop , Sri Lanka

**ID08120789** M
35yrs, 6'1" , Single , Rohini , N/A Sevai , High School , Tba , Canada

**ID08120790** M
21yrs, 4' , Single , Not Specified , N/A Sevai , High School , Casc , Anguilla

**ID08120793** M
25yrs, Not Specified , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Sri Lanka

**ID08120796** M
30yrs, 5'9" , Annulled , Thiruvonam , 8 Sevai , High School , Truck Driver , Canada

**ID08120797** M
33yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Masters Degree , IT Consultant , Sri Lanka

**ID08120801** M
69yrs, 5'10" , Divorced , Visaakam , N/A Sevai , Diploma , Security Officer , Canada

**ID08120811** M
36yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Masters Degree , Team Leader , Canada

**ID08120810** M
42yrs, 6' , Single , Uthiram , N/A Sevai , Bachelors.. , Executive , Sri Lanka

**ID08120812** M
32yrs, 5'7" , Single , Avittam , 10 Sevai , Masters Degree , Cyber Security.. , Sri Lanka

**ID08120813** M
30yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Pharmacy , Canada

**ID08120814** M
43yrs, 5'5" , Divorced , Not Specified , N/A Sevai , Bachelors.. , Manager , Canada

**ID08120816** M
22yrs, Not Specified , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Canada

**ID08120817** M
41yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Self Employee , Sri Lanka

**ID08120818** M
36yrs, 5'5" , Divorced , Not Specified , N/A Sevai , High School , Carpenter , Sri Lanka

**ID08120820** M
30yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Masters Degree , Senior manager , Sri Lanka

**ID08120821** M
30yrs, 5' , Single , Avittam , N/A Sevai , Bachelors.. , Manager Sri Lanka

**ID08120829** M
38yrs, 5'8" , Single , Revathi , N/A Sevai , High School , Restaurant , France

**ID08120786** M
36yrs, 5'5" , Single , Chathayam/sadayam , N/A Sevai , High School , Carpenter , Sri Lanka

**ID08120710** M
22yrs, Not Specified , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Sri Lanka

# புதிய ஆட்சியாளர்கள் தமிழர் பிரச்சனைக்கு தீர்வு தருவார்களா? இந்தியத் தூதுவருடன் தமிழ்த்தேசிய கட்சிகள் பேசியது என்ன?

இலங்கையின் எந்த ஆட்சியாளர்கள் மீதும் எங்களுக்கு (தமிழர்கள்) நம்பிக்கை இருந்ததில்லை. அதே போல், தற்பொழுது ஆட்சிக்கு வந்திருப்பவர்கள் புதியவர்கள். ஆகவே அனுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஆட்சியாளர்கள் 13 ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்துவார்கள் என்று கூறினாலும் அதனை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் என்று தமிழ் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகள் வலியுறுத்தியிருப்பதுடன், வடக்கு கிழக்கு மாகாணத்தில் இந்தியா முன்மொழிந்திருந்த முன்னெடுத்திருந்த அபிவிருத்தி திட்டங்களை எந்த தடையுமில்லாமல் முன்னெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.



மேலும், புதிய ஜனாதிபதியுடன் வேலை செய்வதற்கு இந்தியா ஆயத்தமாயிருக்கிறது என்றும் இந்தியாவுக்கும் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவுக்குமிடையில் சிறந்த நட்புறவு இருப்பதாகவும் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தமிழ் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்ததுடன் பொதுத் தேர்தலின் பின்னர் புதிய அரசாங்கத்துடன் வேலை செய்வதற்கு இந்தியா ஆர்வமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவிற்கும் தமிழ் தேசிய கட்சிகளின் தலைவர்களுக்குமிடையில் கடந்த திங்கட்கிழமை மாலை கொழும்பில் சந்திப்பொன்று நடைபெற்றது. இந்த சந்திப்பில், நடைபெற்று முடிந்துள்ள ஜனாதிபதி தேர்தலின் நிலைவரங்கள் மற்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் பொது தேர்தலில்கள நிலைவரங்கள், நாட்டினுடைய பொருளாதார நிலைமைகள் மற்றும் தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினை தீர்வில் புதிய அரசாங்கம் எவ்வாறு செயற்படும் போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

மேற்படி சந்திப்பில் தமிழ்த் தேசிய கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி தமிழரசுக்கட்சி சார்பில் அதன் தலைவர் மாவை சேனாதிராஜா, செயலாளர் ப.சத்தியலிங்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் மற்றும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவர் தருமலிங்கம் சித்தார்த்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் (டெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பு தொடர்பில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில் இலங்கையின் எந்த ஆட்சியாளர்கள் மீதும் எங்களுக்கு (தமிழர்கள்) நம்பிக்கை இருந்ததில்லை. தற்பொழுது ஆட்சிக்கு வந்திருப்பவர்கள் புதியவர்கள். ஆகவே அனுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஆட்சியாளர்கள் 13 ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்துவார்கள் என்று கூறினாலும் அதனை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். அதேபோல், தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி) மார்க்சிய கொள்கையை கொண்டவர்கள். இவர்களுக்கு நாட்டினுடைய பொருளாதாரத்தை முன்னுக்கு கொண்டு செல்ல வேண்டிய மிக முக்கியமானதொரு பிரச்சினையும் இருக்கிறது. அதனை இவர்களால் எந்தளவுக்கு சாத்தியமாக்க முடியும் என்ற கேள்வியும் இருக்கிறது.

காரணம், உலக நாடுகள் இவ்வாறான கொள்கையுடையவர்களுடன் எவ்வளவு தூரம் நெருங்கிப்போகும் என்ற ஒரு கேள்வியும் இருக்கிறது என நாங்கள் இந்திய உயர்ஸ்தானிகரிடம் எடுத்துக்கூறினோம்.

அதேபோல்அடுத்த வருடமளவில் உலக நாடுகளிடம் இலங்கை வாங்கிய கடன்களை திருப்பி செலுத்த வேண்டிய ஒரு சூழல் ஏற்படவிருக்கும் நிலையில், உள்நாட்டில் அபிவிருத்தி எதுவும் இல்லாமல் வெளிநாட்டு கடன்களை கொடுக்க ஆரம்பித்தால் நிலைமைகள் மேலும் மோசமானதாக மாறக்கூடிய நிலைமைகளும் இருக்கின்றன. அந்த அடிப்படையில் பாராளுமன்றத் தேர்தலுக்கு பின்னர் தான் ஆட்சியாளர்களுடைய உண்மையான நிலைமைகள் தெரியவரும்.

பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு அறுதிப் பெரும்பான்மை பலம் கூட கிடைக்கலாம். ஆனால், புதியதொரு அரசியல் சாசனத்தை கொண்டு வருவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்குமா என்பதும் அவ்வாறு கிடைக்கா விட்டால் புதிய அரசியல் சாசனம் பற்றி பேசுவதில் அர்த்தமில்லை என்பதையும் இந்திய உயர்ஸ்தானிகரிடம் எடுத்துக் கூறினோம்.

அனுரகுமார திஸாநாயக்க தலைமையிலான கட்சி ஆரம்பத்திலிருந்தே சீன சார்பு கட்சியாகவே இருந்து வந்திருக்கிறது.இன்று அவர்களுடைய கொள்கைகளில் பல மாற்றங்கள் இருந்தாலும் எந்தளவுக்கு அவர்கள் இலங்கையின் விவகாரங்களில் அல்லது சர்வதேச சமூகத்துடனான உறவில் நிதானமாக இருப்பார்கள் என்ற கேள்வியும் இருக்கிறது.

இலங்கையினுடைய பொருளாதார நலனில் இந்தியா சில விடயங்களில் முன்னின்று அக்கறையாக செயற்பட்டிருக்கிறது. அதில் குறிப்பாக பலாலி விமான நிலையத்தை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்வதில் இந்தியா அக்கறை காட்டி செயற்பட்டிருந்தது. எனவே பலாலி விமான நிலையத்தில் பெரிய விமானங்கள் வருவதனூடாக வடக்கு மாகாணத்தில் உல்லாசத்துறை வளர்ச்சியடைவதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளன. எனவே அதற்கான வேலைகள் செயல்படுத்தப்பட வேண்டும்.

அதேபோல் வடக்கில் துறைமுக அபிவிருத்தியை முன்னெடுப்பதன் மூலம் வடக்கு மாகாணம் பொருளாதார ரீதியில் பலம்பெறுவதற்கான புதிய புதிய வேலைவாய்ப்புகள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன. மேலும், ஏற்கனவே இந்திய – இலங்கைக்கிடையில் பேச்சு மட்டத்தில் இருக்கின்ற கடல் வழி போக்குவரத்து பாதை தொடர்பான விடயமும் பூர்த்தி செய்யப்பட்டால் இலங்கையில் சுற்றுலாத்துறை மேம்படும், அதே போல் வியாபாரம் அதிகரிக்கும். அதனூடாக பொருளாதாரத்தை சீர்படுத்தலாம். ஆகவே மேற்படி விடயங்களில் இந்தியா அதிக கரிசனை எடுக்கவேண்டும் என்பதை இந்த சந்திப்பில் நாங்கள் வலியுறுத்தி இருக்கிறோம்.

இங்கு பேசிய இந்திய உயர்ஸ்தானிகர், புதிய ஜனாதிபதியுடன் வேலை செய்வதற்கு இந்தியா ஆயத்தமாயிருக்கிறது என்றும் இந்தியாவுக்கும் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவுக்குமிடையில் சிறந்த நட்புறவு இருப்பதாகவும் இந்திய உயர்ஸ்தானிகர் எடுத்துரைத்ததுடன் பொது தேர்தலின் பின்னர் புதிய அரசாங்கத்துடன் வேலை செய்வதற்கு இந்தியா ஆர்வமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.மேலும் எங்களுடைய கோரிக்கைகள் தொடர்பில் கரிசனையுடன் செயற்படுவோம் எனவும் உறுதியளித்தார் என சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

## அநுர அரசுடன் சர்வதேச நாணய நிதியக் குழு

(7ம் பக்கத் தொடர்ச்சி) ஆராய்வதே இந்த விஜயத்தின் நோக்கமாகும். இதன்படி, ஐ.எம்.எப். பிரதிநிதிகள் குழுவிற் கும் புதிய அரசாங்கத்தின் சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சு வார்த்தைகளுக்காக நியமிக்கப் பட்டுள்ள பொருளாதாரக் குழுவிற்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

சர்வதேச நாணய நிதியத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான வேலைத் திட்டம் தொடர்பில் இதன் போது இருதரப்பும் மீளாய்வு செய்ததோடு அதன் எதிர்கால செயற்பாடுகளுக்கான திட்டங்கள் குறித்தும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இலங்கை தொடர்பான சாதகமான அணுகுமுறையை அதிகரித்து தற்போதைய அரசாங்கத்தின் கீழ் நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய சீர்திருத்தங்கள் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் பாராட்டுத் தெரிவித்தனர்.

பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான இலங்கையின் அர்ப்பணிப்பு மற்றும் சர்வதேசத்தின் தொடர்ச்சியான ஆதரவை நோக்கி ஒரு தீர்க்கமான முன்னெடுப்பும் இங்கு கோடிட்டுக் காட்டப்பட்டது.

ஈழநாடு - அன்பு இல்லத் தொடர்புகளுக்கு
ஈழநாடு பரமேஸ் 416 841 9600

T.S.A Meat Store
உடன் இறைச்சி
விநியோகம்
ஸ்ரீ 647.328.8880
சானு 416.456.3051


பிறந்தநாள், ஊர் ஒன்றுகூடல்கள்,
வீட்டுக் கொண்டாட்டங்கள் மற்றும் உங்கள்
வீட்டுத் தேவைகளுக்கு ஏற்றவாறு
ஊர் ஆட்டிறைச்சி
சிறு சிறு துண்டுகளாக மொத்தமாகவும்
சில்லறையாகவும் துப்பரவாக வெட்டிக் கொடுக்கப்படும்.

# இஸ்ரேல் - ஈரான்படை மற்றும் ஆயுத பலம் யாருக்கு அதிகம்?

இஸ்ரேல் மீது இரான் ஏவுகணைத் தாக்குதலை நடத்திய பிறகு, மத்திய கிழக்கு பிராந்தியத்தில் பெருமளவிலான போர் தொடங்குவது குறித்த அச்சம் நிலவுகிறது.

ஏப்ரல் மாதத்துக்குப் பிறகு இரான் இஸ்ரேல் மீது நடத்தும் தாக்குதல் இது. இஸ்ரேல் மறுபுறம் தொடர்ந்து லெபனான் மீது தாக்குதல் நடத்தி



வருகிறது. இஸ்ரேல் நடத்திய சமீபத்திய வான் தாக்குதலில் ஐந்து பேர் உயிரிழந்ததாகவும் எட்டு பேர் காயமடைந்ததாகவும் லெபனான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த ஏவுகணைத் தாக்குதல்கள் போராக மாறினால் என்ன நடக்கும் என உலகம் முழுவதும் பெரும் அச்சம் எழுந்துள்ளது.

இரான் 180 ஏவுகணைகளை ஏவியதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது. கடந்த ஏப்ரல் மாதம் நடந்த தாக்குதலைக் காட்டிலும் இது சற்றே பெரிய தாக்குதலாக உள்ளது. ஏனென்றால் அப்போது இரான் 110 பாலிஸ்டிக் ஏவுகணைகளையும் 30 க்ரூஸ் வகை ஏவுகணைகளையும் ஏவியது.

இரான் தனது 90 சதவீத ஏவுகணைகள் இலக்கை அடைந்தாகத் தெரிவித்துள்ளது. இதில் ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இஸ்ரேலின் வான் பாதுகாப்பு அமைப்பான அயர்ன் டோம், பெரும்பாலான ஏவுகணைகளை இடைமறித்து அழித்துவிட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

ஏவுகணைகள் ராணுவ தளங்கள், சில உணவகங்கள் மற்றும் பள்ளிகளை தாக்கியதாக இஸ்ரேலில் உள்ள பிபிசி செய்தியாளர் தெரிவித்துள்ளார். இந்நிலையில், போர்ச் சூழல் வந்தால் இரு நாட்டில் யார் வலுவானவர்கள் என்ற கேள்வி எழுகிறது.

பிபிசி இந்தக் கேள்விக்கான பதிலைப் பெற பல்வேறு ஆதாரங்களை ஆய்வு செய்தது. இரு நாடுகளுக்கும் குறிப்பிடத்தக்க திறன்கள் உள்ளன, அவை ரகசியமாக வைக்கப்பட்டுள்ளன. எனவே எந்த நாடு பலம் மிக்கது என்பதைத் துல்லியமாகக் கூற இயலாது.

## வான் தாக்குதலுக்கே வாய்ப்பு அதிகம்

ஐ.ஐ.எஸ்.எஸ் எனப்படும் சர்வதேச மூலோபாய ஆய்வுகள் நிறுவனம் (International Institute for Strategic Studies - IISS) ராணுவ திறன்களை ஒப்பிடுவதில் நம்பகமான அமைப்பாகக் கருதப்படுகிறது. ஸ்டாக்ஹோம் இன்டர்நேஷனல் பீஸ் ரிசர்ச் இன்ஸ்டிடியூட்டும் இத்தகைய மதிப்பீடுகளைச் செய்கிறது.

இஸ்ரேல், இரான் ஆகிய இரு நாடுகளின் மக்கள் தொகையிலும் பெரும் வேறுபாடு உள்ளது. இரானின் மக்கள் தொகை இஸ்ரேலை காட்டிலும் அதிகம். ஆனால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இஸ்ரேல் முன்னணியில் உள்ளது. அதாவது இஸ்ரேலின் ஜிடிபி அதிகமாக உள்ளது. அதேபோல இஸ்ரேல், தனது பாதுகாப்புக்காக இரானை காட்டிலும் அதிகமாகச் செலவழிக்கிறது என்று ஐ.ஐ.எஸ்.எஸ் கூறுகிறது. இஸ்ரேல் இரானில் இருந்து 2100 கிமீட்டர் தூரத்தில் உள்ளது. எனவே இரு நாடுகளுக்கு இடையே 'போர் என்று வந்தால் வான்வழித் தாக்குதல்தான் நடைபெறும். இஸ்ரேல் இரா னுடன் தரைவழித் தாக்குதலை மேற்கொள்வதற்கான சாத்தியங்கள் மிகக்குறைவு' என்கிறார் டிஃபன்ஸ் ஐ (Defence Eye)பத்திரிகையாளர் டிம் ரிப்ளே.

## போர் விமானங்கள் யாரிடம் அதிகம்?

ஐ.ஐ.எஸ்.எஸ் (IISS) புள்ளிவிவரங்கள், இஸ்ரேலிடம் 340 ராணுவ விமானங்கள் போருக்குத் தயாராக இருப்பதாகக் காட்டுகின்றன.

ஜெட் விமானங்களில் நீண்டதூர வரம்பைக் கொண்ட கு-15 விமானங்கள், ரேடாரை தவிர்க்க வல்ல உயர் தொழில்



நுட்ப கு-35 விமானங்கள் மற்றும் துரிதமான தாக்குதலை நடத்தவல்ல ஹெலிகாப்டர்கள் ஆகியவை இதில் அடங்கும். இஸ்ரேலின் வான் படை மற்றும் Guided Weapons எனப்படும் கட்டுப்படுத்தவல்ல ஆயுதங்கள் அந்நாட்டிற்குப் பெரும் பலமாக உள்ளன. இரானில் உள்ள இலக்குகளை இஸ்ரேல் வான்வழியாகத் தாக்க முடியும். சமீபமாக ஹெஸ்பொலா தலைவர் நஸ்ரல்லா கொல்லப்பட்டது இதற்கு ஓர் உதாரணம்.

மறுபுறம் இரானிடம் சுமார் 320 போர் விமானங்கள் இருப்பதாக ஐ.ஐ.எஸ்.எஸ் மதிப்பிட்டுள்ளது. இந்த ஜெட் விமானங்கள் 1960களில் இருந்தே இருப்பவை. இதில் கு4, கு5 மற்றும் கு14 ஆகியவை அடங்கும். (கு14 விமானம், 1986 திரைப்படமான 'டாப் கன்' மூலம் பிரபலமானது).

இந்தப் பழைய விமானங்களில் உண்மையில் எத்தனை விமானங்கள் பறக்கக்கூடியவை என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஏனெனில் பழுது பார்க்கும் பாகங்களைப் பெறுவது மிகவும் கடினமாக இருக்கும்.

இவை தவிர, இரானின் ஏவுகணைத் திட்டம் மத்திய கிழக்குப் பிராந்தியத்திலேயே மிகப் பெரியதாகக் கருதப்படுகிறது. கடந்த 2022ஆம் ஆண்டில், அமெரிக்க மத்திய கட்டளையின் ஜெனரல் கென்னத் மெக்கென்சி, இரானிடம் '3,000க்கும் அதிகமான' பாலிஸ்டிக் ஏவுகணைகள் இருப்பதாகக் கூறினார்.

இரான் குறுகிய மற்றும் நீண்டதூர ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை உருவாக்கியுள்ளது. அவற்றில் பல, கடந்த ஏப்ரல் மாதம் இஸ்ரேல் மீது ஏவப்பட்டன. ஆனால் இஸ்ரேலிடம் இதற்குத் தீர்வு உள்ளது. இஸ்ரேலின் பாதுகாப்பு அமைப்பின் முதுகெலும்பாக, அதன் 'அயர்ன் டோம்', 'ஏரோ' அமைப்புகள் மற்றும் டேவிட் ஸ்லிங் ஆகியவை இருக்கின்றன. சுமார் 10 கி.மீ. தூரத்தில் இருந்து ஏவப்படும் குறுகிய தூர ராக்கெட்டுகளை அயர்ன் டோம் இடைமறித்துவிடும்.

டேவிட் ஸ்லிங் அமைப்பு அமெரிக்கா மற்றும் இஸ்ரேலால் சேர்ந்து உருவாக்கப்பட்டது. இதைக் கொண்டு இடைதூர மற்றும் நீண்டதூர ராக்கெட்டுகள் பாலிஸ்டிக் மற்றும் க்ரூஸ் ஏவுகணைகளை இடைமறிக்க முடியும். சுமார் 100 கி.மீ. தூரம் வரை பாய்ந்து செல்லக்கூடிய தொலைதூர பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏரோ அமைப்பு தடுக்கும் வல்லமை கொண்டது.

## அதிக படைவீரர்களைக் கொண்டது யார்

இரானிடம் இஸ்ரேலை காட்டிலும் 6 மடங்கு அதிக படை வீரர்கள் உள்ளனர். ஐஐஎஸ்எஸ்-இன் தரவுகள்படி இரானிடம் 6 லட்சம் படைவீரர்கள் உள்ளனர், இஸ்ரேலிடம் சுமார் ஒரு லட்சத்து 70 ஆயிரம் படைவீரர்கள் உள்ளனர்.

தற்காலத்தில், எந்தவொரு நாடும் தனியாகப் போரிட முடியாது. இரானிடம் 'ஆக்ஸிஸ் ஆஃப் ரெஸிஸ்டென்ஸ்' உள்ளது. அதாவது அண்டை நாடுகளில் உள்ள பல ஆயுததாரி குழுக்கள் இரானுக்கு ஆதரவாக இருக்கின்றன. லெபனானில் ஹெஸ்பொலா, ஏமனில் ஹஜீத்தி குழு, பஹ்ரைனில் அல் அஷ்தார் ப்ரிகேட் ஆகியவை உள்ளன.

இதுதவிர, ஹமாஸ் குழுவும் உள்ளது. இதன் வாழ்நாள் இலக்கு இஸ்ரேலை அழிப்பது மட்டுமே. இரானின் புரட்சிகர காவல் படை மற்றும் குத் படை மத்திய கிழக்கில் தனது அதிகாரத்தை நிலைநாட்ட இந்த ஆயுதக் குழுக்களுக்கு பல மில்லியன் டாலர்கள் நிதியுதவி வழங்குகின்றன. இவற்றுக்குப் பயிற்சியையும் வழங்குகிறது. அதே போல் இஸ்ரேலுக்கு அமெரிக்கா அனைத்து வழிகளிலும் உதவி வருகிறது. அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு இடையே ஆண்டுதோறும் 50 பில்லியன் மதிப்பிலான வர்த்தகம் நடைபெறுகிறது.

## இரகசியமாக இருக்கும் அணு ஆயுத வல்லமை

அதேபோல, போர்ச் சூழல் எழுந்ததால் அணு ஆயுத அச்சுறுத்தலும் எழுகிறது. இஸ்ரேலிடம் அணு ஆயுதங்கள் இருப்பதாக நம்பப்படுகிறது. ஆனால் இஸ்ரேல் அதை வெளிப்படையாகச் சொல்வதைத் தவிர்க்கிறது. இரானிடம் அணு ஆயுதங்கள் இருப்பதற்கான சாத்தியங்கள் குறைவு. ஆனால் இரான் அணு ஆயுதங்களை உருவாக்க முயல்வதாக குற்றச்சாட்டுகள் உள்ளன. இரான் இந்தக் குற்றச்சாட்டுகளை மறுக்கிறது. சைபர் தாக்குதலை எடுத்துக் கொண்டால், இஸ்ரேல் மீது சைபர் தாக்குதல் நடந்தால் இரானுக்கு அது பலனளிக்கும். இஸ்ரேலின் பாதுகாப்பு அமைப்பு இரானின் பாதுகாப்பு அமைப்பைவிட தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்டது. எனவே இஸ்ரேல் மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டால் இஸ்ரேலுக்கு அதிக பாதிப்புகள் ஏற்படும்.

## அடுத்து என்ன நடக்கும்?

இஸ்ரேலின் ராணுவ அதிகாரிகளும் தலைவர்களும் அடிக்கடி ஒரு வாசகத்தைப் பயன்படுத்துவர். அதாவது எங்கு அதிகம் வலிக்கிறதோ அங்கு தாக்க வேண்டும் என்று கூறுவர். இதுதான் அவர்களின் போருக்கான கொள்கை.

அக்டோபர் 1ஆம் தேதிக்குப் பிறகான தாக்குதலுக்குப் பிறகு இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் நஃப்டாலி பென்னட் தனது எக்ஸ் பக்கத்தில், ‘50 ஆண்டுகளில் மத்திய கிழக்கின் நிலையை மாற்றுவதற்கு இது ஒரு பெரிய வாய்ப்பு எனப் பதிவிட்டுள்ளார்.

மேலும் இஸ்ரேல் இரானின் அணு ஆற்றல் கட்டமைப்புகளைத் தாக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். எனவே இஸ்ரேலின் பதிலடி குறித்த கவலைகள் அதிகரிக்கின்றன.

**நன்றி:- பிபிசி**



# மேன்மை தங்கிய ஜனாதிபதியாக ஒரு தோழர்

கட்டுரையாளர்:
கொழும்பில் இருந்து
- வீ.தனபாலசிங்கம் -





இரு வருடங்களுக்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்கவை பாராளுமன்றம் ஜனாதிபதியாக தெரிவு செய்தபோது இலங்கை வரலாறு கண்டிராத மக்கள் கிளர்ச்சியினால் இறுதியில் பயனடைந்தவர் அவரே என்று கூறப்பட்டதுண்டு. ஆனால், கடந்த வாரம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் அந்த கிளர்ச்சியின் உண்மையான பயனாளி யார் என்பதை உலகிற்கு காட்டியது.

இடதுசாரி அரசியல் கட்சிகளினதும் அவற்றின் தொழிற் சங்கங்களினதும் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட 1953 ஆகஸ்ட் ஹர்த்தால் போராட்டத்துக்கு பிறகு ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின் மீது மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்புணர்வை பயன்படுத்தி ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் எஸ்.டபிள்யூ .ஆர்.டி. பண்டாரநாயக்க மூன்று வருடங்களுக்கு பிறகு பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று பிரதமராக பதவிக்கு வந்ததைப் போன்று, 'அறகலய' மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு இரு வருடங்கள் கடந்த நிலையில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரா குமார திசாநாயக்க நாட்டின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இரு நிகழ்வுகளுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க வித்தியாசங்கள் இருக்கின்றன. பண்டாரநாயக்க ஹர்த்தாலை ஆதரிக்காமலேயே அதன் விளைவாக மாற்றமடைந்த அரசியல் சூழ்நிலையை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தினார். ஹர்த்தாலை நடத்திய இடதுசாரி தலைவர்களினால் அவ்வாறு செய்ய முடியவில்லை. அந்த போராட்டத்தின் வெற்றியினால் தடுமாறிப் போன அவர்கள் அடுத்த நகர்வை செய்வதற்கு பயனுறுதியுடைய தந்திரோபாயத்தை வகுக்க முடியாதவர்களாக அப்போது இருந்தார்கள்.

ஆனால், திசாநாயக்க 'அறகலய'வுக்கு தலைமை தாங்கவில்லை என்ற போதிலும், அவரின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி முழுமையான ஆதரவை வழங்கியது. அந்த போராட்டத்தின் விளைவாக நாட்டின் அரசியல் நிலவரத்தில் ஏற்பட்ட மாற்றத்தின் பயனாக அவர் இன்று ஜனாதிபதியாக வந்திருக்கிறார். அன்றைய இடதுசாரி தலைவர்களினால் அவர்களது சொந்தத்தில் ஒரு போதும் ஆட்சியதிகாரத்துக்கு வரமுடியவில்லை.

ஜனாதிபதி தேர்தலில் திசாநாயக்கவின் வெற்றி இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதன் முதலாக ஒரு இடதுசாரி அரசியல்வாதியை நாட்டின் தலைவராக உச்சநிலைக்கு கொண்டு வந்திருக்கிறது.

அவரது வெற்றி ஏழு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக ஆட்சியில் ஏகபோகத்தை தங்கள் பிறப்புரிமை போன்று அனுபவித்த பாரம்பரிய அரசியல் அதிகார வர்க்கத்திடமிருந்து அரசியல் அதிகாரத்தை ஒரு சாதாரண குடும்பப் பின்னணியைக் கொண்ட ஒருவருக்கு கைமாற்றியிருக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, திசாநாயக்கவின் வெற்றி குறித்து கருத்துக் கூறியபோது குடும்ப ஆதிக்க அரசியலை மக்கள் நிராகரித்திருப்பது பற்றி எதுவும் கூறாமல் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர் இன்று நாட்டின் உயர் பதவிக்கு வந்ததற்கு தனது தந்தையார் மண்டாரநாயக்க 1956 ஆண்டில் செய்த 'புரட்சியே' காரணம் என்று உரிமை கோரியிருக்கிறார். இலங்கையின் முக்கியமான அரசியல் அறிஞர்களில் ஒருவரான பேராசிரியர் ஜயதேவ உயன்கொடவின் வார்த்தைகளில் கூறுவதானால் அரசியல் அதிகாரத்தின் வர்க்கத் தளங்கள் கொழும்பை மையமாகக் கொண்டு வாழும் மேற்கத்தைய பாணி வாழ்க்கை முறையைக் கொண்ட சிறுபான்மையினரான உயர் குடியினரிடம் இருந்து சாதாரண சமூக சக்திகளுக்கு மாறியிருக்கிறது. ஜனநாயகத்தின் ஊடாக நிறுவனமயப் படுத்தப்பட்டிருந்த அரசியல் அதிகாரத்தின் வர்க்க ஏகபோகம் அதே ஜன நாயகத்தினால் தகர்க்கப்பட்டிருக்கிறது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இலங்கையில் முதற் தடவையாக மார்க்சியவாதி ஒருவர் ஆட்சியதிகாரத்துக்கு வந்திருப்பதாக வர்ணிக்கப்படுகிறது. பாரம்பரிய அர்த்தத்திலான மார்க்சியவாதியாக திசாநாயக்கவை இன்று நோக்கமுடியாது. பத்து வருடங்களுக்கு முன்னர் ஜே.வி.பி.யின் தலைவராக வந்த பிறகு அவர் முன்னைய போக்குகளில் இருந்து பெரிதும் வேறுபட்ட முறையிலேயே கட்சியை வழிநடத்தி வந்திருக்கிறார். ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி இன்று ஆட்சியதிகாரத்துக்கு வந்திருக்கிறது என்றால் திசாநாயக்க கட்சியின் போக்குகளில் செய்த மாற்றங்கள் அதற்கு முக்கிய காரணம்.

தெற்காசியாவில் நேபாளத்திற்கு பிறகு இடதுசாரி தலைவர் ஒருவரை அரசாங்க தலைவராக தெரிவு செய்த நாடாக இலங்கை விளங்குகிறது. உலகின் ஒரேயொரு இந்து இராச்சியமாக விளங்கிய நேபாளத்தில் முடியாட்சியை முடிவுக்கு கொண்டு வந்த மாவோவாத கம்யுனிஸ்ட் ஆயுதக் கிளர்ச்சிக்கு தலைமை தாங்கிய பிரசண்டா முதற் தடவையாக 2008 ஆம் ஆண்டில் பிரதமராக பதவியேற்றார். இதுவரையான 18 வருடங்களில் அவர் மூன்று தடவைகள் பிரதமராக பதவிக்கு வந்தார். இப்போதும் அவரே பிரதமராக இருக்கிறார்.

மாவோவாதியான பிரசண்டாவும் அவரது கம்யுனிஸ்ட் கட்சியும் ஆட்சியதிகாரத்தில் இருந்து வந்த காலப்பகுதியில் அவர்களின் அணுகுமுறைகளில் ஏற்பட்ட மாற்றம் அவர்களை நேபாளத்தின் ஏனைய தாராளவாத முதலாளித்துவ கட்சிகளில் இருந்து பெருமளவுக்கு வேறுபடுத்திப் பார்க்கமுடியாத நிலையை உருவாக்கிவிட்டது என்று அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள்.

இலங்கையில் திசாநாயக்கவின் தலைமையில் ஜே.வி.பி. ஏற்கெனவே ஒரு இடதுசாரிப் போக்கில் இருந்து பெருமளவுக்கு விடுபடத் தொடங்கிவிட்டது. தீவிர வலதுசாரியான முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த இரு வருடங்களாக சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலின் கீழ் முன்னெடுத்துவந்த பொருளாதார மறுசீரமைப்பு திட்டத்தை தொடருவதாக உறுதியளிக்கின்ற அளவுக்கு தேசிய மக்கள் சக்தி மாறுதலுக்கு உள்ளாகியிருக்கிறது.

ஜே.வி.பி.யின் கடந்த காலத்தை அடிப்படையாகக் கொண்டு எதிரணியினரால் முன்னெடுக்கப்பட்ட பிரசாரங்களுக்கு பதிலளிக்கும் வேளைகளில் எல்லாம் திசாநாயக்க அடிப்படைக் கொள்கைகளை கைவிடவில்லை என்ற போதிலும் தற்போதைய சர்வதேச நிலைவரங்களுக்கு ஏற்ற முறையில் தங்களது அணுகுமுறைகளில் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறது என்று கூறி வந்திருக்கிறார். உலகில் ஒரு சோசலிச முகாம் இல்லாத காரணத்தால் இந்த மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை என்றும் அவர் விளக்கமளித்தார்.


பொருளாதார நெருக்கடி உட்பட தாங்கள் எதிர்நோக்கும் பெருவாரியான பிரச்சினைகளுக்கு பாரம்பரிய அரசியல் சக்திகளின் தவறான ஆட்சிமுறையே காரணம் என்பதை விளங்கிக் கொண்ட மக்கள் மத்தியில் பொது வாழ்வை தூய்மைப்படுத்துவது குறித்து திசாநாயக்க அளித்த உறுதிமொழி பெரும் வரவேற்பை பெற்றது. ஊழலுக்கு எதிரான அவரின் செய்தியும் புதியதொரு அரசியல் கலாசாரத்தை தோற்றுவிக்கப்போவதாக அளித்த வாக்குறுதியும் முறைமை மாற்றம் ஒன்றை வேண்டிநின்ற இளம் வாக்காளர்களுக்கு பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தன.

நீண்டகாலமாக பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காவிட்டாலும் கூட பழைய பிரதான அரசியல் கட்சிகளையே மாறிமாறி ஆட்சிக்கு கொண்டு வந்து சலித்துப் போன மக்கள் இரு வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் குழப்பநிலைக்கு பிறகு பாரம்பரிய அரசியல் அதிகார வர்க்கத்துக்கு வெளியில் உள்ள ஒருவரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பதில் காட்டிய ஆர்வத்தை தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டின. உண்மையில் இது மக்கள் செய்து பார்க்கத்துணிந்த ஒரு பரிசோதனையே என்பதில் சந்தேகமில்லை.


பாரம்பரிய அதிகார வர்க்கத்தின் மீது கடுமையாக வெறுப்படைந்த மக்கள் 'மாற்றத்துக்கான' வேட்பாளராக (22ம் பக்கம் பார்க்க)




# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! பலராலும் செய்ய முடியாத காரியங்களை வெற்றிகரமாக முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் வாக்கு வன்மையால் எளிதாக நல்ல லாபம் கிடைக்க பெறுவீர்கள். பிரச்சனைகளை பேசியே தீர்த்து விடுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் பதவி உயர்வு, கூடுதல் பொறுப்பு கிடைக்க பெறுவார்கள். எதிலும் திட்டமிட்டு செயலாற்றுவதால் மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும்.





ரஷபராசி அன்பர்களே! புத்தி சாதுர்யத்தை பயன்படுத்தி காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். செயல் திறன் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைச்சல் உண்டாகும். புதிய ஆர்டர்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். பணவரத்து திருப்தி தரும். புதிய வேலைக்கு முயற்சி செய்வது நன்மை தரும். வாழ்க்கை துணை உங்களுக்கு பல விதத்திலும் உதவிகள் செய்வார்.





மிதுனராசி அன்பர்களே! மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். நெருக்கடியான சந்தர்ப்பத்தில் உதவிகள் கிடைப்பது கடினமாக இருக்கும். எந்த காரியங்களில் ஈடுபட்டாலும் மனத் தடுமாற்றம் இல்லாமல் இருப்பது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். அதிகாரிகள் கூறிய வேலையை செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். சகஊழியர்களிடம் அனுசரித்து செல்வது நல்லது.





கடகராசி அன்பர்களே! செயல் திறன் மேலோங்கும். மதிப்பும், மரியாதையும் கூடும். தொழில் வியாபாரம் தொடர்பாக பயணங்கள் சென்று வரவேண்டி இருக்கும். வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திப்பர். குற்றச்சாட்டுகளுக்கும் ஆளாகலாம் கவனம் தேவை. குடும்பத்தினரிடம் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் அனுசரித்து செல்வது நல்லது. மருத்துவம் தொடர்பான செலவும் ஏற்படலாம்.





சிம்மராசி அன்பர்களே! நண்பர்களுடன் சேர்ந்து செய்யும் காரியம் சாதகமான பலன் தரும். திட்டமிட்டு செய்யும் பயணங்கள் வெற்றி பெறும். செலவு செய்வது பற்றி யோசனை செய்து தேவையென்றால் மட்டுமே செய்வீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் சக பணியாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து முக்கிய முடிவுகள் எடுப்பது நன்மை தருவதாக இருக்கும்.




கன்னிராசி அன்பர்களே! எதிர் காலம் தொடர்பான திட்டங்கள் மனதில் தோன்றும். எதையும் முன்னேற்பாட்டுடன் செய்வீர்கள். விவேகம் உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக நடந்து முடிய திறமையாக செயல்படுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் ஏற்கனவே செய்த திறமையான பணிகளுக்கு உரிய நற்பலனை பெறுவார்கள். குடும்பத்தில் தாய்வழி உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.





துலாம்ராசி அன்பர்களே! அறிவு திறமை வெளிப்படும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண்டாகும். அடுத்தவர்களின் குற்றச்சாட்டுக்கு ஆளாகநேரிடலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக்கும். வாடிக்கையாளர்களிடம் சாமர்த்தியமாக பேசுவதன் மூலம் வியாபாரம் வளர்ச்சி பெறும். பிறர் கூறும் ஆலோசனைகளை ஆராய்ந்து பார்த்து செய்வது நல்லது. உத்யோகஸ்தர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். வாக்குவாதத்தையும், கோபத்தையும் தவிர்ப்பது நல்லது.





விருச்சிகராசி அன்பர்களே! நீங்கள் நல்லதாக பேசினாலும் எதிரில் உள்ளவர்கள் அதை தவறான கண்ணோட்டத்துடனேயே பார்ப்பார்கள். மற்றவர்களின் செயல்களால் மன அமைதி கெடவும் வாய்ப்பு உண்டு. தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் கூடுதல் முயற்சிக்கு பிறகு எதிர்பார்த்தபடி நடந்து முடியும். வியாபாரத்தில் புதுமையை செய்வீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு பிடித்தமான இடத்திற்கு வேலை மாற்றம் கிடைக்கலாம்.







தனுசுராசி அன்பர்களே! கடினமான பணிகளையும் செய்து முடிக்கும் துணிச்சல் ஏற்படும். காரிய வெற்றியால் மனதில் சந்தோஷம் உண்டாகும். இருக்கும் இடத்தை விட்டு வெளியில் சென்று தங்க நேரிடும். தொழில் வியாபாரம் பற்றி மனதில் இருந்த கவலை நீங்கி தைரியம் உண்டாகும் கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் குறையும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வேலையை சிறப்பாக செய்து முடிப்பர்.




மகரராசி அன்பர்களே! எந்த ஒரு காரியமும் வெற்றியடைவதுடன் லாபகரமாகவும் இருக்கும். இழுபறியாக இருந்த ஒரு சில விஷயங்கள் நல்ல முடிவுக்கு வரும். வீடு, வாகனங்கள் வாங்கும் நிலை உருவாகும். தொழில், வியாபாரம் முன்னேற்றம் காணப்படும். வியாபார வளர்ச்சிக்கு புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு நிலுவையில் உள்ள பணம் கைக்கு கிடைக்கும். பயணங்களால் லாபம் கிடைக்கும்.




கும்பராசி அன்பர்களே! எதையும் ஆராய்ந்து பார்த்த பிறகே அதை செய்ய முற்படுவீர்கள். தொட்ட காரியம் வெற்றியில் முடிந்தாலும் சற்று கால தாமதம் ஆகலாம். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொழில், வியாபாரம் மிகவும் சிறப்பாக நடைபெறும். வியாபாரம் மற்றும் தொழிலை விரிவுபடுத்துவது பற்றி திட்டங்களை செயல்படுத்துவீர்கள். பயணங்கள் சாதகமான பலனை தரும். உத்யோகஸ்தர்கள் முன்னேற்றம் காண்பர்.




மீனராசி அன்பர்களே! ஆக்கபூர்வமான யோசனைகள் தோன்றும். கடித போக்குவரத்து அனுகூலமான பலனை தரும். புது வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். தொழிலில் முன்னேற்றம் காணப்படும். சாமர்த்தியமாக வாடிக்கையாளர்களுடன் பேசிஅவர்களை தக்க வைத்துக் கொள்வீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் எதிர் காலம் பற்றிய திட்டங்களை வகுப்பார்கள். குடும்பத்தில் இருப்ப வர்களிடம் தன்மையாக பேசி பழகுவது நல்லது.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# மேன்மை தங்கிய ஜனாதிபதியாக ஒரு தோழர்

(21ம் பக்கத் தொடர்ச்சி) திசாநாயக்காவை நோக்கினார்கள். கடந்த இரு வருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வந்த பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் விளைவாக தன்னால் சாதிக்க முடிந்ததாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரசாரப்படுத்திய 'உறுதிப்பாட்டையும் வழமை நிலையையும்' அனுபவிக்கக் கூடியவர்களாக இருந்த பிரிவினரே அவருக்கு வாக்களித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு விக்கிரமசிங்க தனது பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் மாத்திரம் முழுமையாக தங்கியிருந்தது அவரின் தந்திரோபாயங்களில் இருந்த மிகப்பெரிய குறைபாடாகும். நீண்ட கால அரசியல் அனுபவத்தையும் வளமான அறிவையும் கொண்ட அவருக்கு நாடு அண்மைக்காலமாக எதிர் நோக்கிவரும் பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் மக்கள் பொருளாதாரக் காரணியை மாத்திரம் மனதிற்கொண்டு வாக்களிக்கப் போவதில்லை என்பது தெரிந்திருக்கவில்லை.

பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபடும் ஆர்வத்தில் மக்கள் இது காலவரையான தவறான ஆட்சிமுறை, குடும்ப ஆதிக்க அரசியல், அதிகார துஷ்பிரயோகம், சட்டத்தின் ஆட்சியின் சீர்குலைவு மற்றும் முன்னென்றும் இல்லாத ஊழலை மறந்து விடுவார்கள் என்று அவர் நினைத்தாரோ?

தனது ஐக்கிய தேசிய கட்சிக்கு ஒரு குறிப்பிடத்தக்க வாக்கு வங்கி இல்லாத நிலையில் ராஜபக்சாக்களின் கட்சியில் இருந்தும் வேறு கட்சிகளில் இருந்தும் வந்த அரசியல்வாதிகளை நம்பி கூட்டணி ஒன்றை அமைத்து சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றிபெற முடியும் என்று விக்கிரமசிங்க நினைத்தது பெரும் தவறு. முன்னரைப் போன்று சிறுபான்மைச் சமூகங்களும் அவரை இந்த தடவை ஆதரிக்க முன்வரவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவை பெரும்பாலான மக்கள் பாரம்பரிய அரசியல் அதிகார வர்க்கத்தின் ஒரு அங்கமாகவே நோக்கினார்கள். அவருக்கு இது ஜனாதிபதி தேர்தலில் இரண்டாவது தோல்வி. திசாநாயக்கவிடம் தோல்வி கண்டாலும் கூட விக்கிரமசிங்கவை தோற்கடித்துவிட்டதில் பிரேமதாச ஒருவிதத்தில் திருப்தியடைந்திருக்கக்கூடும்.

ஜனாதிபதி திசாநாயக்கவும் கூட ஐம்பது சதவீதமான வாக்குகளை பெற முடியவில்லை. இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் வரலாற்றில் முதன் முதலாக மற்றைய வேட்பாளர்களின் இரண்டாவது விருப்பு வாக்குகளை எண்ண வேண்டிய நிர்ப்பந்தம் இந்த தடவையே ஏற்பட்டது. தனக்கு கிடைத்த ஆணையின் தன்மையை அவர் விளங்கிக்கொண்டு செயற்பட வேண்டிய தேவை இருக்கிறது.

கொழும்பில் அதிகார ஏகபோகத்தைக் கொண்டிருந்த மூன்று பிரதான அரசியல் கட்சிகளையும் கிரகணம் செய்து திசாநாயக்கவும் தேசிய ஐக்கிய மக்கள் சக்தியும் தேர்தலில் கண்டிருக்கும் வெற்றி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை நாட்டை விட்டு வெளியேற வைத்த 2022 மக்கள் கிளர்ச்சியுடன் தொடக்கிய மாற்றத்தை நோக்கிய அரசியல் நிகழ்வுகளின் சுழற்சியை நிறைவு செய்கிறது என்று எவரும் மெத்தனமாக நினைத்து விடக்கூடாது. ஜனாதிபதி திசாநாயக்க சமாளிக்க முடியாத எண்ணற்ற சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியவராக இருக்கிறார்.

பாராளுமன்றத்தை கலைத்து இரு மாதங்களுக்கும் குறைவான இடைவெளிக்குள் பொதுத்தேர்தலுக்கான திகதியை அவர் அறிவித்திருக்கிறார். ஜனாதிபதி தேர்தலில் கண்ட தோல்வியின் தாக்கத்தில் இருந்து மற்றைய கட்சிகள் விடுபடுவற்கு முன்னதாக இந்த அறிவிப்பு வந்திருக்கிறது.

பொருளாதாரத்தை உறுதிப்பாட்டுக்கு கொண்டுவரவும் வாக்குறுதிகளை நிறைவேற்றவும் தேசிய மக்கள் சக்திக்கு பாராளுமன்ற தேர்தலில் பெரிய வெற்றியைத் தரவேண்டும் என்று திசாநாயக்க தன்னை ஜனாதிபதியாக தெரிவு செய்த மக்களிடம் கோருவார். ஜனாதிபதி தேர்தலில் மக்கள் வாக்களித்த முறையின் அடிப்படையில் தான் பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் அமையுமா அல்லது அவருக்கு முழுமையான வாய்ப்பைக் கொடுப்பதற்காக தேசிய மக்கள் சக்தியை மக்கள் அதிகப்பெரும்பான்மை ஆசனங்களுடன் தெரிவு செய்வார்களா என்பது முக்கியமான கேள்வி.

இது இவ்வாறிருக்க, ஜனாதிபதி தேர்தலில் மக்கள் வாக்களித்த முறையின் புவியியல் ஒழுங்கை கருத்தில் எடுக்க வேண்டியதும் அவசியமாகிறது.

தென்னிலங்கையில் இருந்து குறிப்பாக சிங்கள பௌத்த சமூகத்தவர்கள் அதிகப் பெரும்பான்மையாக வாழும் பிராந்தியங்களில் இருந்து பெரும்பான்மை ஆதரவைப் பெற்று திசாநாயக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். அதற்கு மாறாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் மயைகத்திலும் சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் பிரேமதாசவுக்கும் விக்கிரமசிங்கவுக்குமே பெருமளவில் வாக்களித்திருக்கிறார்கள்.

சிறுபான்மைச் சமூகங்கள் திசாநாயக்கவுக்கு முற்றாக வாக்களிக்கவில்லை என்று கூறமுடியாது. ஆனால், பெரும்பான்மை இனத்தவர்களின் வாக்குகள் தான் அவரை வெற்றிபெற வைத்தன. அதற்காக கோட்டாபய ராஜபக்ச போன்று சிங்கள மக்களே தன்னை ஜனாதிபதியாக தெரிவு செய்தார்கள் என்று திசாநாயக்க ஒரு போதும் சொல்லப் போவதில்லை.

கோட்டாபய சிங்கள மக்களின் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்டதற்கான காரணத்துக்கும் திசாநாயக்க தெரிவு செய்யப்பட்ட காரணத்துக்கும் இடையே வேறுபாடு இருக்கிறது.

அதேவேளை, தாங்கள் நம்பிக்கை வைக்கக்கூடிய ஒரு அரசியல் தலைவராக திசாநாயக்கவை சிங்கள பௌத்த தேசியவாத சக்திகளில் கணிசமான பிரிவினர் அடையாளம் கண்டு ஆதரவு வழங்கியிருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால், சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளுக்கு எதிரான அந்த தேசியவாத சக்திகளின் நிர்ப்பந்தங்களுக்கு அடிபணியாமல் துணிச்சலாக திசாநாயக்க நடந்து கொள்வாரா இல்லையா என்ற கேள்விக்கு காலம் தான் பதில் சொல்ல வேண்டும். தங்களது பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியிடமிருந்து புதிய அணுகுமுறையை சிறுபான்மைச் சமூகங்கள் எதிர்பார்க்கின்றன.

சிறுபான்மைச் சமூகங்கள் குறிப்பாக வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்கள் மாற்றத்தை விரும்பவில்லை என்று தேர்தல் முடிவுகளை வியாக்கியானம் செய்யமுடியாது. சிங்கள மக்கள் விரு ம்புகின்ற மாற்றத்திற்குள் தங்களது அபிலாசைகளுக்கு எந்தளவுக்கு மதிப்பளிக்கப்படும் என்பதே தமிழ் மக்கள் மத்தியில் உள்ள கேள்வி.

எது எவ்வாறிருந்தாலும், இதுகால வரை இலங்கை அரசியல் அதிகாரத்தை தங்களது ஏகபோகத்தில் வைத் திருந்த ஒரு வர்க்கத்துக்கு வெளியில் உள்ள ஒரு 'தோழர்' ஜனநாயக வழி முறையின் மூலமாக நாட்டின் தலை வராக தெரிவு செய்யப்பட்டதில் உள்ள வரலாற்று முக்கியத்துவத்துவம் உரிய முறையில் புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஜனாதிபதி திசாநாயக்க ஒரு கணிசமான காலப் பகுதிக்கு ஆட்சி செய்த பின்னர் மாத்திரமே அவரைப் பற்றிய மதிப்பீட்டைச் செய்ய முடியும்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation

10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

## Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு வாங்க.. விற்க..
HomeLife Higher Standards
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*

நாளை பற்றிய கவலையை தவிர்க்க நம்பிக்கையானது
காப்புறுதி ஒன்றே!
• Life Insurance
• Critical Illness Insurance
• Disability Insurance
• Mortgage Insurance
• Super Visa Insurance
• RESP, RRSP and TFSA
Arun KULASINGAM
Life Insurance Agent
416.357.2847
kulasingam33@yahoo.ca
iA Financial Group
Canada Protection Plan
Assumption Life
Foresters
KABIS

BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
உங்கள் சகல City Permit தேவைகளுக்கு
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email:kathirhomes@gmail.com


# சிங்கப்பூரில் முன்னாள் அமைச்சரான தமிழர் ஈஸ்வரனுக்கு சிறைத்தண்டனை


அதிகாரத்தில் இருக்கும் போது பரிசுப் பொட்களை கையூட்டலாக பெற்றுக் கொண்ட குற்றச்சாட்டில், சிங்கப்பூரின் தமிழரான முன்னாள் அமைச்சர் சுப்ரமணியம் ஈஸ்வரனுக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 62 வயதான ஈஸ்வரன் சுமார் நான்கு லட்சம் சிங்கப்பூர் டாலர்கள் பெறுமதியான பரிசுப் பொருட்களை பெற்றுக்கொண்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஃபோர்மிளா வன் க்ரோன்ப்ரீ மோட்டார் போட்டிகளுக்கான நுழைவு சீட்டுகள், சைக்கிள்கள், மதுபானம் மற்றும் தனியார் ஜெட் பயணம் போன்றவற்றை முன்னாள் அமைச்சர் ஈஸ்வரன் பரிசாக பெற்றுக் கொண்டார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த குற்றச் செயல்களுக்காக முன்னாள் அமைச்சர் ஈஸ்வரனுக்கு ஒரு வருட சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. முன்னாள் அமைச்சர் ஈஸ்வரன் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தார் எனவும் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 7ம்திகதி முதல் முன்னாள் அமைச்சர் சுப்பிரமணியம் ஈஸ்வரன் சிறை தண்டனை அனுபவிப்பார் என தெரிவிக்கப்படுகிறது.

சிங்கப்பூர் அரசியல் வரலாற்றில் 50 ஆண்டுகளில் முதல் தடவையாக தண்டனை விதிக்கப்படும் அரசியல்வாதி இவர் என்பது குறிப்பிடத்தக்கது. சிங்கப்பூரில் அரசியல்வாதிகளுக்கு கூடுதல் கொடுப்பனவு வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. உலகில் அரசியல்வாதிகளுக்கு அதிகளவு கொடுப்பனவு வழங்கப்படும் நாடுகளில் ஒன்றாக சிங்கப்பூர் திகழ்



கின்றது.

இவ்வாறான ஒரு பின்னணியில் பதவியில் இருக்கும்போது பரிசு பொருட்களை பெற்றுக் கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு பரிசு பொருட்களை பெற்றுக் கொள்வது பொது மக்களுக்கு சேவையாற்றுவதில் இடையூறுகளை ஏற்படுத்தும் எனவும் பக்க சார்பு நிலைகளை உருவாக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே அரசியல்வாதிகள் இவ்வாறு பரிசு பொருட்களை பெற்றுக் கொள்வது கையூட்டலாகவே கருதப்பட வேண்டும் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# பொதுத்தேர்தலுக்குப் பின்னர் உள்ளூராட்சித் தேர்தல்

பிற்போடப்பட்ட 2023 உள்ளூராட்சி சபைத் தேர்தலை, எதிர்வரும் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் விரைவில் நடத்துவதற்கு ஆயத்தமாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பொதுத் தேர்தல்கள் நிறைவடைந்த பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதிகள் விரைவில் அறிவிக்கப்படும் என ஆணைக்குழு விடுத்துள்ள விசேட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்களை நடத்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு தொடர்பான சட்ட நடவடிக்கைகள் மற்றும் நிதி விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடியதன் பின்னரே தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சுமூகமாக நடத்துவதை உறுதி செய்வதற்காக முக்கிய பங்குதாரர்களுடன் ஆரம்பக் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாங்கள் தேவையான அடிப்படை வேலைகளை முடித்து விட்டோம், பொதுத் தேர்தலுக்குப் பிறகு உடனடியாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவோம்' என்று ஆணைக்குழு மீண்டும் வலியுறுத்தியது.





வானிலை கணிக்கக்கூடியது ஆனால்
உங்கள் எதிர்காலம் அப்படியல்ல
எங்கள் நோக்கம் உங்கள்
எதிர்காலத்தை பாதுகாப்பது
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
LIFE INSURANCE | CRITICAL ILLNESS | DISABILITY INSURANCE
NON-MEDICAL INSURANCE | SUPER VISAS | RRSP & RESP
WE TRULY CARE FOR YOU &
YOUR LOVED ONES!
647 401 5800 ajithinsurance.ca ajithsaba@gmail.com
10 Thornmount Dr, Scarborough, Ontario M1B 3J4


Nathaswara Thavil Music Of Global Inc.
நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு
27th ANNIVERSARY
இடம் :
TAMIL ISAI KALAMANDRAM
1120, Tapscott Rd, Unit, #3,
Scarborouch ON, M1Y 1E8
காலம் : Oct-19-2024 சனிக்கிழமை
நேரம் : மாலை. 4.30 மணிக்கு ஆரம்பம்
அனுமதி இலவசம்
நாட்டிய வேதா இந்திய கிளாசிக்கல் டான்ஸ் ஸ்ரீமதி ஜெயா பத்மினி ஆனந் அவர்களின் மாணவிகள் வழங்கும் பரதநாட்டியம்.
சக்தி சங்கீத அகடமி ஸ்தாபகர் சங்கீத வித்தகி திருமதி பராசக்தி விநாயகதேவராஜா அவர்களின் மாணவ மாணவிகள் வழங்கும் இன்னிசை
ஏழிசை மதுரசபா ஸ்தாபகர் வீணை வித்துசி திருமதி கல்யாணி சுதர்சன் அவர்களின் மாணவிகள் வழங்கும் வீணை இசை.
தவில் வித்துவான் கலைமாமணி திருப்புன்கூர் திரு. T.G முத்துக்குமாரசாமி அவர்கள்
நாதஸ்வர வித்துவான் அளவையூர் கலாநிதி R. கேதீஸ்வரன் அவர்கள்
திரு. R. குருமூர்த்தி
திரு. V.M.V. மணிகண்டன்
திரு. S. ரவீந்திரன்
திரு. K.R. முத்துக்குமாரசாமி
திரு. V.M. செல்வராஜ்
திரு. R. வெங்கடேஸ்
திரு P. மெய்யப்பமுரளி
திரு S. முருகானந்தம்
திரு. S. பூரணச்சந்திரன்
திரு A. நந்தீஸ்குமார்
திரு. V. ராஜா
திரு. G.பிரேம்குமார்
திரு V. சரவணன்
திரு V. மாணிக்கவாசகம்
திரு. S.P. பழனிவேல்
திரு D. இராஜகோபால்
திரு R. மாரிசாமி
திரு T.M. மணிகண்டன்
திரு D. பிரசாத்
திரு T.N.V மதன்ராஜ்
திரு K.G.K. கார்த்திகேயன்
திரு. M. முருகானந்தம்
திரு. K.P. கருணா
திரு. D. வினோத்
செல்வி N. கீர்த்திகா
செல்வி C. சனாதினி
நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு 27வது வருட விழாவை கொண்டாட இருக்கிறது இவ்வருடம் அக்டோபர் மாதம் 19ஆம் தேதி நடைபெறுகிறது. விழாவை சிறப்பிக்க இந்தியாவில் இருந்து சிறப்பு வருகை தருகிறார்கள். தவில் வித்வான் கலைமாமணி திருப்புன்கூர் T.G. முத்துகுமாரசுவாமி அவர்களும் நாதஸ்வர வித்வான் அளவையூர் கலாநிதி R. கேதீஸ்வரன் அவர்களும் அத்துடன் Toronto, Montreal ஆலயங்களில் இருக்கும் நாதஸ்வர தவில் வித்வான்களும் மற்றும் Toronto, Montreal நாதஸ்வர தவில் வித்வான்களும் இணைந்து மங்கள இசையை சிறப்பிக்க உள்ளார்கள் அத்துடன் வளர்ந்துவரும் இசைக் கலைஞர்களின் பாட்டு, வயலின், மிருதங்கம், வீணை, பரதநாட்டியம் ஆகிய நிகழ்வுகளும் நடைபெறவுள்ளது. அனைத்து குருமார்கள் நாதஸ்வர தவில் கலைஞர்கள் மற்றும் ரசிக பெருமக்கள் அனைவரையும் வருக வருக என நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு வரவேற்கிறது.
விபரங்களுக்கு: நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு
DR. ஆ. முருகதாஸ் Tel:416-420-1309 / 289-660-3850
Email: ntm97@yahoo.com web:www.nathaswarathavil.org
ANALAI EXPRESS
Analaiexpress TV
Analaiexpress Facebook
Design and Print By Designs 2 Print @ Majestic City : Prabagar - 647.858.2290 / 416 292 4999 / www.designs2prints.com